بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 14

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ரமலான் 14 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - ஷஹாதத் 06 ★ 06 ஏப்ரல் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

شَهْرُ رَمَضَانَ الَّذِىْٓ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ ۚ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ ؕ

**பொருள் :**

ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பட்ட மாதமாகும். திருகுர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழிக் காட்டக்கூடியதும், நேர்வழியைத் தெளிவாக்கக்கூடியதும் (நன்மை,தீமையை) பிரித்தறியக் கூடியதும் ஆகும். எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும்.

(அல்பக்கரா : 186)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைப் பண்புகளின் வெளிப்பாடு ஆவார்கள்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து……

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைப் பண்புகளின் வெளிப்பாடு ஆவார்கள்**

சூரா ஃபாத்திஹாவில் கூறப்பட்டுள்ள நான்கு பண்புகளின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் அந்த நான்கு பண்புகளின் முன்மாதிரிகள் உள்ளன.மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்களின் இருப்பில் அந்த நான்கு பண்புகளின் முன்மாதிரியை இறைவன் காட்டியுள்ளான் என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்பியுள்ளேன். (சூரா ஃபாத்திஹா உம்முல் கிதாப் மற்றும் மஸானீ என்றும் கூறப்படுகின்றது. மேலும் அது திருக்குர்ஆனின் சாராம்சம் ஆகும்) ஆக, அந்த நான்கு பண்புகளும் ஒருவகையில் வாதமாக இருந்தன. மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் இருப்பு சான்றாக உள்ளது. ஆக, ரூபூபிய்யத் என்ற பண்பு அன்னாரின் இருப்பில் இவ்வாறு நிரூபணம் ஆகின்றது. அதாவது, மக்காவின் காடுகளில் பத்து ஆண்டுகள் வரை ஆச்சரியமாக சுற்றித் திரியக்கூடியவராக அந்த நபர் இருந்தார். மேலும் அவருக்கு எந்த வழியும் தென்படாமல் இருந்தது. மேலும் இஸ்லாம் பூமி முழுவதும் பரவி விடும் என்றும் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் 90 கோடி யை அடைந்துவிடுவார்கள் என்றும் அவரது வளர்ச்சியைப் பற்றி எவருக்கு எண்ணம் இருந்தது!

ஆனால், இன்று பாருங்கள்! உலகில் மக்கள் வசிக்கும் பகுதிகளில் முஸ்லிம் இல்லாத எந்தப் பகுதியுமே இல்லை. அடுத்து, அர்ரஹ்மான் என்ற பண்பை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் தேட்டம் என்னவென்றால் அமல்கள் இன்றி வெற்றி மற்றும் தேவைக்கான ஏற்பாடுகள் இருக்க வேண்டும். இது எத்தகைய ரஹ்மானியத் ஆக இருந்தது! அதாவது, அன்னார் (ஸல்) தோன்றுவதற்கு முன்னரே ஏற்பாடுகள் உருவாகியிருந்தன. உமர் (ரலி) குழந்தைகளைப் போன்று விளையாடிக் கொண்டிருந்தார். அபூபக்ர் (ரலி) நிராகரிப்பாளர்களின் வீட்டில் பிறந்திருந்தார். அதேபோன்று இன்னும் ஏராளமான ஸஹாபிகள் (பிற்காலத்தில்) அன்னாருடன் இணைந்து கொண்டார்கள். ஒருவகையில் ரஹ்மானிய்யத்தே இலாஹி அவர்களை அன்னாருக்காக முன்னரே தயார் செய்து வைத்திருந்தது. மேலும் ரஹ்மானிய்த்தின் விவகாரங்கள் எந்த அளவிற்கு இஸ்லாத்துடன் இருக்கின்றன என்றால், அவற்றை விரிவாக எடுத்துரைக்கவும் நம்மால் இயலாது. உம்மீயத் என்பது ரஹ்மானிய்யத்தை விரும்புகின்றது.

மேலும், هُوَالَّذِىْ بَعَثَ فِى الْاُمِّيّٖنَ رَسُوْلًا என்று அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து கூறியுள்ளான். ரஹ்மானிய்யத்தின் தேட்டம் இந்த பழமொழியில் மிகவும் வெளிப்படுகிறது.

அதாவது செய்துவிடு. செய்ய வைத்துவிடு. மேலும் உயர்த்தக்கூடியவன் ஆதரவு அளிக்க வேண்டும்.

இந்த விஷயம் இஸ்லாத்துடன் நிகழ்ந்தது. இஸ்லாம் ஒருவகையில் இறைவனின் மடியில் குழந்தையாக உள்ளது. அதனுடைய அனைத்து பணிகளையும் மேற்கொள்ளக்கூடியவன் மற்றும் அதன் அனைத்து அடிப்படைத் தேவைகளையும் ஏற்பாடு செய்யக்கூடியவன் இறைவன் ஆவான். எந்த படைப்பினத்தின் நன்மையின் சுமையும் அதன் கழுத்தில் இருக்கவில்லை. அதேபோன்று உழைப்புகளை வீணாக்காத ரஹீம் என்ற பண்பு உள்ளது.

அதன் எதிர் வினை என்னவென்றால், பணி செய்து கொண்டே இருப்பது. மேலும் தோல்வியடைந்து கொண்டே இருப்பது ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ரஹீமிய்யத்தின் வெளிப்பாட்டைப் பாருங்கள்! எவ்வளவு தெள்ளத் தெளிவாக வெளிப்பட்டுள்ளது! அன்னாருக்கு வெற்றி கிடைக்காத எந்த ஒரு போருமே இல்லை என்று கூறலாம். சிறிதளவு பணி செய்து அதிக அளவு நற்கூலி கிடைத்தது. மின்னலின் வெளிச்சத்தைப் போன்று அன்னாரின் வெற்றிகள் ஒளிவீசுகின்றன. சிரியாவில் கிடைத்த வெற்றிகள் மற்றும் எகிப்து வெற்றிகளையே எடுத்துக் கொள்ளுங்கள். வரலாற்றின் பக்கங்களில் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த வெற்றிகளைப் போன்று வேறு எந்த மனிதருக்கும் உண்மையான பொருளில் வெற்றி கிடைக்கவில்லை.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 454 - காதியான் பதிப்பு 2018)

* * * * *

## நபிமொழி

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்பண்புகள்**

(26) ஹஸ்ரத் ஸஅத் பின் ஹஷ்ஷாம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சமூகத்தில் (ஒரு முறை) ஆஜரானோம். மேலும், உம்முல் மூஃமினீன் அவர்களே! எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்பண்புகளைக் குறித்து கொஞ்சம் கூறுங்கள் என்று நான் கேட்டேன். அப்போது, நீங்கள் திருக்குர்ஆன் ஓதுவதில்லையா? என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் (என்னிடம்) கேட்டார்கள். அதற்கு ஏன் இல்லை? நிச்சயமாக ஓதுகின்றேன் என்று நான் கூறினேன். அப்போது, அல்லாஹ்வின் நபியின் நல்லொழுக்கம் திருக்குர்ஆனிற்கு ஏற்பவே இருந்தது என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்லிம், பாடம்;அஸ்ஸலாத்)

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நல்லொழுக்கங்களை முழுமைப்படுத்துவதற்காகவே தோன்றினார்கள்**

(28) ஹஸ்ரத் இமாம் மாலிக் அறிவிக்கின்றார்கள்: நான் நல்லொழுக்கங்களை முழுமை செய்வதற்காகவே அனுப்பப்பட்டுள்ளேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது, நான் நல்ல மற்றும் உயரிய நல்லொழுக்கங்களை முழுமை செய்வதற்காக தோன்றியுள்ளேன்.

(ஹதீகத்துஸ் ஸாலிஹீன் - நூலாசரியர் மதிப்பிற்குரிய மலிக் ஸைஃபுர் ரஹ்மான் ஸாஹிப்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்கள் மற்றும் எழுத்துக்களின் ஒளியில் திருக்குர்ஆனின் சிறப்பம்சங்கள், உயர்ந்த அந்தஸ்து மற்றும் முக்கியத்துவம் தொடர்பான நற்குறிப்புகள்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த ஆழத்துடன் திருக்குர்ஆனின் அந்தஸ்து மற்றும் முக்கியத்துவம் தொடர்பாக நமக்கு விளக்கியுள்ளார்களோ அதுவே இறைவனின் நெருக்கத்தை பெறுவதற்கும் திருக்குர்ஆனின் போதனையின்படி அமல் செய்வதற்கும் தேவையான புரிதலையும் ஞானத்தையும் நமக்கு வழங்குகின்றது**

**நான் உலகின் அனைத்து நபிமார்களுக்கும், அனைத்து வேதங்களுக்கும் மரியாதை செலுத்துகின்றபோதிலும் உயிருள்ள வேதமாக இஸ்லாத்தை மட்டுமே ஏற்கின்றேன். ஏனெனில், அதன் மூலமாக என்னிடம் இறைவன் வெளிப்பட்டுள்ளான்- ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்**

**நாம் திருக்குர்ஆனை ஏற்றுக் கொண்ட நிலையில் நம்மிடம் சீர்திருத்தம் ஏற்படவில்லையென்றால் தவறு நம்முடையதாகும். ஏனெனில் அன்னார் (அலை) கூறியதுபோன்று முழுமையாகப் பின்பற்றுவது அவசியம் ஆகும். முழுமையாகப் பின்பற்றாவிட்டால் பின்னர் எவ்வாறு சீர்திருத்தம் ஏற்படும்? அதன்படி அமல் செய்யவில்லையென்றால் எவ்வாறு சீர்திருத்தம் ஏற்படும்? நாம் முழுமையாக பின்பற்றக் கூடியவர்களாகத் திகழ்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் அதற்கான நற்பேறை (நமக்கு) வழங்குவானாக**

**பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக துஆவிற்கான அறிவிப்பு**

**அல்லாஹ் அஹ்மதிகளை (அங்கு) பாதுகாப்பாக வைப்பானாக. மேலும் (அஹ்மதிய்யத்தின் எதிரிகளாகிய) அவர்களை பிடிப்பதற்கான ஏற்பாட்டையும் செய்வானாக. இனி அவர்களின் நேர்வழிக்காக எந்த துஆவும் செய்ய முடியாது.**

اَللّٰهُمَّ مَزِّقْهُمْ كُلَّ مُمَزَّقٍ وَسَحِّقْهُمْ تَسْحِيْقًا

**என்ற துஆவே அவர்களுக்காக நமது நாவிலிருந்து வெளிப்படுகின்றது. உள்ளத்திலிருந்து(ம்) வெளிப்படுகின்றது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 03 மார்ச் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **அமான்** மாதம் **03ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் எந்த ஞானத்தை நமக்கு வழங்கியுள்ளார்களோ அல்லது அந்த ஞானத்தை புரிவதற்காகவும் அதன்படி அமல் செய்வதற்காகவும் தமது நூல் மற்றும் மேற்கோள்களில் எந்த வடிவில் அதனை அன்னார் முன்வைத்துள்ளார்களோ அது தொடர்பாக நான் கடந்த ஜுமுஆக்களில் இரண்டு குத்பாக்களை வழங்கியுள்ளேன்.

திருக்குர்ஆன் இறைஞானத்தின் கருவூலத்தை நமக்கு வழங்குகின்றது. இவைதான் உள்ளபடியே இறைவனுடன் அடியாரை சந்திக்க வைக்கின்றது. இதைத் தவிர இறைவனை அடைவதற்கும், அவனது நெருக்கத்தை பெறுவதற்கும் வேறு எந்த வழிமுறையும் இல்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஒரு கவிதையில் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் இறைவனைக் காட்டக்கூடியது ஆகும். அது இறைவனின் வேதமாகும். அதுவன்றி, இறைஞானத்தின் தோட்டம் முழுமையற்றதாகும்.

எனவே இது எப்படிப்பட்ட ஒரு கருத்து என்றால், இதனை எப்போதும் நாம் நமது கருத்தில் கொள்ள வேண்டும். நாம் இறைவனின் நெருக்கத்தையும், அவனது திருப்தியையும் (பெற) விரும்புகின்றோம் என்றால் மேலும், நாம் நமது இம்மை மற்றும் மறுமையை ஒழுங்குப்படுத்த விரும்புகின்றோம் என்றால் பின்னர் இந்த விஷயங்களை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது திருக்குர்ஆனே அந்த வழிமுறை ஆகும் என்ற விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும். அதேநேரம் இந்த விஷயத்தையும் நினைவிற் கொள்ள வேண்டும். அந்த இறைஞானத்தை புரிவதற்கும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டுள்ள மற்றும் நியமிக்கப்பட்டுள்ள ஒரு வழிகாட்டியின் தேவையும் இருக்கின்றது. அவர் இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) ஆவார்.

அன்னார் (அலை) திருக்குர்ஆனின் பல்வேறு அம்சங்களின் மீது மிகவும் ஆழமாக சென்று ஒளிபாய்ச்சி உள்ளார்கள். மேலும் அதன் அழகை எடுத்துரைத்துள்ளார்கள். நான் கூறியது போன்று அதனை நான் கடந்த இரண்டு குத்பாக்களில் எடுத்துரைத்து இருந்தேன். அன்னார் (அலை) எடுத்துரைத்த அறிவு மற்றும் ஞானத்தின் கருவூலமும் திருக்குர்ஆன் போதனைகளை புரிவதற்கான இந்தத் தொடரும் இத்துடன் முடிந்துவிடவில்லை. மாறாக, இன்னும் அது தொடர்பாக ஏராளமான விஷயங்கள் எடுத்துரைக்கப்பட உள்ளன. இன்றும் அந்தத் தொடரை நீட்டித்தவாறு திருக்குர்ஆனின் சிறப்புகள், அந்தஸ்து மற்றும் முக்கியத்துவம் தொடர்பான குறிப்புகளை நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)அவர்களின் மேற்கோள்கள் மற்றும் எழுத்துக்களின் ஒளியில் நான் எடுத்துரைப்பேன்.

அன்னார் (அலை) எந்த ஆழத்துடன் திருக்குர்ஆனின் அந்தஸ்து மற்றும் முக்கியத்துவம் தொடர்பாக நமக்கு விளக்கியுள்ளார்களோ அதுவே இறைவனின் நெருக்கத்தை பெறுவதற்கும் திருக்குர்ஆனின் போதனையின்படி அமல் செய்வதற்கும் தேவையான புரிதலையும் ஞானத்தையும் நமக்கு வழங்குகின்றது.

எனவே நாம் நமது வாழ்வின் நோக்கங்களை பெறக் கூடியவர்களாக திகழ்வதற்கு மிகவும் கவனத்துடன் இந்த விஷயங்களை கேட்பதற்கும் புரிவதற்கும் நாம் முயற்சி செய்ய வேண்டும்.

திருக்குர்ஆன் இறைவனின் வேதமாகும் என்ற விஷயத்தை விவரித்தவாறு லாலா பீம் ஸீன் என்பவரின் பெயரில் எழுதிய ஒரு கடிதத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதுகின்றார்கள்:

தற்போது சில நாட்களுக்கு முன் நிகழ்ந்த விஷயமாகும். அதாவது லேக்ராம் என்ற பெயர் கொண்ட ஒரு பிராமணராகிய ஆரியர் காதியானில் என்னிடம் வந்தார். மேலும் வேத் (வேதம்) இறைவனின் மறையாகும். திருக்குர்ஆன் இறைவனின் வேதமல்ல என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) கூறினார்கள் : வேத் (வேதம்) இறைவனின் மறையாகும் என்பது உமது வாதமாகும். ஆனால் அதன் தற்போதைய வடிவின் அடிப்படையில் நான் அதனை இறைவனின் மறையாக ஏற்கவில்லை. ஏனெனில் அதில் இணை வைத்தலுக்கான போதனை உள்ளது. எந்த வேதத்தில் இணை வைத்தலுக்கான போதனை இருக்குமோ அது எப்படி இறை வேதமாக இருக்க முடியும்! அதுமட்டுமின்றி இன்னும் பல அசுத்தமான போதனைகள் அதில் உள்ளன. ஆனால் நான் திருக்குர்ஆனை இறைவனின்

வேதமாக அறிகின்றேன். ஏனெனில் அதில் இணை வைத்தலுக்கான போதனையும் இல்லை. அதில் வேறெந்த அசுத்தமான போதனையும் இல்லை. அதனை பின்பற்றுவதால் உயிருள்ள இறைவன் காட்சியளிக்கின்றான். அற்புதங்கள் வெளிப்படுகின்றன. (மக்தூபாதே அஹ்மத், தொகுதி 1, பக்கம் 90)

எனவே (ஒரு மறை) இறை வேதமாக இருப்பதற்கான ஒரு நிபந்தனை என்னவென்றால், அது ஷிர்க் எனும் இணை வைத்தலிலிருந்து தூய்மையானதாக இருக்க வேண்டும். மேலும், அதன்படி அமல் செய்வதால் இறைவனின் முகம் காட்சியளிக்க வேண்டும்.

திருக்குர்ஆன் இறைவனின் முகத்தை காட்டிக் கொடுப்பதில் என்ன பங்கு ஆற்றியுள்ளது? இந்த விஷயத்தை நம்மால் ஸஹாபிகளின் வாழ்க்கையில் பார்க்க முடிகின்றது.

ஆக, ஸஹாபிகளின் மீதான திருக்குர்ஆன் போதனைகளின் தாக்கம் என்ற விஷயத்தை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலம் இஸ்லாத்தின் தலைமைத்துவத்திற்கான காலமாக இருந்தது. அக்காலத்தின் மீது ஒரு பரந்த பார்வையை செலுத்துவதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை எவ்வாறு ஈமான் கொள்ளக் கூடியவர்களை கீழான அந்தஸ்திலிருந்து உயர்ந்த அந்தஸ்தை அடையச் செய்தது என்ற விஷயம் நிரூபணமாகின்றது.

ஏனெனில், ஈமான் கொள்ளக்கூடியவர்களில் பெரும்பாலார் தமது ஆரம்ப நிலையில் இவ்வாறு இருந்தனர். அதாவது அவர்கள் எந்த நிலையை தம்முடன் எடுத்து வந்தார்களோ அது காட்டுமிராண்டித்தனத்தை விடவும் மோசமானதாக இருந்தது. அவர்களின் வாழ்க்கை விலங்குகளைப் போன்றதாக இருந்தது. மனிதத்துவத்திலிருந்து வெளியேறிவிடும் அளவிற்கு அவர்கள் தீய நடத்தைகளிலும், கெட்ட குணங்களிலும் மூழ்கியிருந்தனர். மேலும் தாங்கள் தீய ஒழுக்கமுடையவர்கள் என்பதை புரிய முடியாமல் இருக்கும் அளவிற்கு அவர்கள் அறிவற்றவர்களாக ஆகியிருந்தனர். அதாவது நன்மை மற்றும் தீமையை பிரித்தறிவதற்கான உணர்வும் அவர்களிடம் இல்லாமல் இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமை அவர்கள் மீது ஏற்படுத்திய முதல் தாக்கம் இவ்வாறாக இருந்தது. அதாவது நாம் பரிசுத்தத்தின் ஆடையிலிருந்து முற்றிலும் நிர்வாணமாக இருக்கின்றோம் மேலும் தீய நடத்தைகள் எனும் அசுத்தத்தால் பீடிக்கப்பட்டுள்ளோம் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

அவர்களின் முந்தைய நிலையைக் குறித்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

أُولَٰئِكَ كَالْأَنْعَامِ بَلْ هُمْ أَضَلُّ

பொருள்: அந்த மக்கள் விலங்குகளுக்கு ஒப்பானவர்கள். இன்னும் கூறப்போனால் அவற்றையும் விட கீழானவர்கள். (அல்அஃராஃப்: 180)

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூயத் தோழமை மற்றும் (திருக்குர்ஆன் எனும்) புகழுக்குரிய சான்றுகளின் மனம் கவர் தாக்கங்களின் மூலமாகவும் தாம் எந்த நிலையில் வாழ்க்கையை கழித்து வருகின்றோமோ அது ஒரு காட்டுமிராண்டித்தனமானது என்பதையும், தாம் முற்றிலும் தீய செயல்களில் மூழ்கியிருக்கின்றோம் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டனர். எனவே அவர்கள் பரிசுத்த ஆவியிடமிருந்து ஆற்றல் பெற்று நற்செயல்கள் செய்வதின் பக்கம் முன்னேறினர்.

அவர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகின்றான்:

وَاَيَّدَهُمْ بِرُوْحٍ مِّنْهُ

பொருள்: இறைவன் ஒரு பரிசுத்த ஆவியின் மூலமாக அவர்களுக்கு உதவி செய்தான்.

அது ஈமான் கொண்ட பிறகும், ஓரளவிற்கு பொறுமையை மேற்கொண்ட பிறகும் மனிதனுக்கு கிடைக்கின்ற அதே மறைமுகமான ஆற்றல் ஆகும். பின்னர் அந்த மக்கள் அந்த ஆற்றலைப் பெற்றப் பிறகு தமது குறைகள் மற்றும் பாவங்களை உணரக்கூடிய மற்றும் அவற்றின் துர் நாற்றத்திலிருந்து விலகி இருக்கக் கூடிய அந்தஸ்தில் மட்டும் அவர்கள் இருக்கவில்லை. மாறாக, அந்நிலையில் திறமைகள் மற்றும் சிறப்புகளின் பாதி அந்தஸ்தை கடக்கும் அளவிற்கு அவர்கள் நன்மையின் பக்கம் அடியெடுத்து வைக்கத் தொடங்கிவிட்டனர். மேலும் பலவீனங்களுக்கு எதிராக நற்செயல்களை செய்வதில் அவர்களிடம் ஆற்றல் பிறந்துவிட்டது. அவர்கள் பலவீனங்களை மட்டும் அகற்றவில்லை. மாறாக, நன்மைகளிலும் முன்னேறிக் கொண்டே சென்றனர். இவ்வாறாக அவர்களுக்கு இடைப்பட்ட நிலை கிடைத்துவிட்டது. பின்னர் அந்த மக்கள் பரிசுத்த ஆவியின் ஆற்றலால் நிரம்பப் பெற்று தமது தூய செயல்களால் ஷைத்தான்களின் மீது மேலோங்கக் கூடிய கடும் முயற்சிகள் எனும் அந்த முஜாஹிதாத்தில் ஈடுபடத் தொடங்கினர். அப்போது அவர்கள் இறைவனை திருப்திபடுத்துவதற்காக எவற்றை விட மனிதனுக்கு வேறெதுவும் இருக்க முடியாதோ அந்த கடும் முயற்சியை அவர்கள் மேற்கொண்டு விட்டனர். அவர்கள் இறைவனின் வழியில் தமது உயிர்களை புற்பூண்டுகளுக்கு சமமாகக் கூட கருதவில்லை. இறுதியில் அவர்கள் ஒப்புக் கொள்ளப்பட்டனர். மேலும் இறைவன் அவர்களின் உள்ளங்களில் பாவத்தின் மீது முழுமையான வெறுப்பை உருவாக்கி விட்டான். மேலும், நன்மையின் மீதான நேசத்தை ஏற்படுத்திவிட்டான்.

(சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 424- 425)

ஆக, திருக்குர்ஆன் அவர்கள் மீது ஏற்படுத்திய தாக்கம் இதுவே ஆகும். அதாவது அவர்கள் பூமியிலிருந்து எழுந்தார்கள். மேலும் விண்ணின் ஒளிமயமான நட்சத்திரங்களாக ஆகிவிட்டனர். (ஸஹாபிகளாகிய) அவர்களைக் குறித்து, அவர்களில் ஒவ்வொருவரும் உங்களுக்கு வழிகாட்டிகள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அல்மிஷ்காதுல் மஸாபீஹ், தொகுதி 3, பக்கம் 1696, கிதாபுல் மனாகிப், பாடம் மனாகிபுஸ் ஸஹாபா, ஹதீஸ் 6009, பதிப்பு-மக்தபுல் இஸ்லமி பெய்ரூத் 1979)

திருக்குர்ஆனைப் பின்பற்றுவதால் மனிதன் இறைப் பண்புகளின் வெளிப்பாடாக ஆகிவிடுகின்றான்.

இந்த விஷயத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எந்த நபர் திருக்குர்ஆனை பின்பற்றக்கூடியவராக திகழ்ந்து (அதன் மீதான) அன்பிலும், நேசத்திலும் உச்சத்தை எட்டி விடுகின்றாரோ அவர் நிழல் வடிவில் இறைப் பண்புகளின் வெளிப்பாடாக மாறி விடுகின்றார்.

வெறும் பின்பற்றுபவராக இருப்பது மட்டும் நிபந்தனை அல்ல. மாறாக, (அதன் மீதான) அன்பு மற்றும் நேசத்தில் உச்சத்தை அடைய வேண்டும். அதாவது அதன் கட்டளைகளின் மீது முழுமையாக அமல் செய்ய வேண்டும். அப்போதுதான் அவர் இறைப் பண்புகளின் வெளிப்பாடாக இருப்பார்.

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்: இந்த அனைத்து விளைவுகளும் இறைவனின் வேதமான திருக்குர்ஆனில் நாம் பார்க்கின்ற அந்த வலிமையான ஆற்றல் மற்றும் சிறப்புத் தன்மையாகும். ஒரு சமுதாயத்தின் பார்வையில் இல்ஹாமிய வேதமாக கருதப்படும் வேறு எந்த ஒரு வேதத்திலும் இந்த வலிமையான ஆற்றலும் சிறப்புகளும் இல்லை. அதற்கான ஒரு காரணம் இதுவாக இருக்கக் கூடும். அதாவது, அந்த வேதங்கள் (இறங்கி) வெகு காலம் ஆகிவிட்டதன் காரணமாக அவை திரிக்கப்பட்டு மாற்றங்கள் உருவாகிவிட்டன அல்லது ஒருவேளை அதன் சொற்களில் மாற்றங்கள் உருவாகாமல் இருந்திருந்தாலும் அர்த்தங்களில் சீர்கேடுகள் உருவாகியிருக்கக் கூடும் அல்லது அநேகமாக இந்த விஷயம் காரணியாக இருந்திருக்கக் கூடும். அதாவது, இறைவன் இந்த இறுதிக்காலத்தில் பிரிவினையை அகற்றுவதற்காகவும், உலகத்தின் அனைத்து மக்களையும் ஒரே வேதத்தின் கீழ் ஒன்றுகூட்டுவதற்காகவும் முந்தைய அனைத்து வேதங்களின் பரக்கத்துகளையும் பறித்திருக்கலாம். திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றுவதன் மூலமாக மனிதன் அல்லாஹ்வின் நேசர்களின் கூட்டத்தில் இணைய முடிகின்றது. மற்ற அந்த வேதங்களில் இந்த சிறப்பு காணப்படுவதில்லை. மனிதனுக்கு இறை நெருக்கத்திற்குரிய இடத்தில் கிடைக்கக் கூடிய அந்த சிறப்புகளை மற்ற வேதங்களை பின்பற்றக்கூடியவர்கள் மறுக்கின்றனர்.

இன்னும் கூறப்போனால், அவர்கள் அற்புதங்கள் மற்றும் அசாதாரண நடைமுறைகளை எள்ளி நகையாடுகின்றனர். அவர்கள் அற்புதங்களை மட்டும் மறுக்கவில்லை மாறாக, அவற்றின் மீது எள்ளி நகையாடவும் செய்கின்றனர். இதன் காரணமாகவே இன்று இறைவனிடமிருந்து வெகு தொலைவில் சென்றுவிட்டனர். மார்க்கத்திலிருந்தும் விலகி விட்டனர்.

பின்னர் கூறினார்கள்: நாம் அவர்களை எவ்வகையிலும் எள்ளி நகையாடுவதில்லை. எவரையும் நாம் எள்ளி நகையாடுவதில்லை. ஆயினும், அவர்களின் இழப்பிற்குரிய நிலையைக் கண்டு நிச்சயம் அழுகை வருகின்றது.

அவர்கள் மீது நமக்கு அனுதாபம் உள்ளது. அதாவது, அவர்கள் அல்லாஹ்விடமிருந்து வெகு தூரம் சென்று அவனது பண்புகளை மறந்து தமது தவறான நடத்தைகளுக்கு நவீன காலத்தின் ஒளியின் பெயரைக் கொடுத்து மீண்டும் விலங்குகளைப் போன்ற செயல்களை செய்வதில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர். இன்றைய காலத்து பௌதீக வணங்கிகளிடம் இவையே நமக்கு தென்படுகின்றன.

எவ்வாறு இருப்பினும், தமது கூற்றின் தொடர்ச்சியாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நான் இந்த இடத்தில் கடந்த கால கதைகளை எடுத்துரைக்கவில்லை. மாறாக, எவற்றைக் குறித்து எனக்கு சுயமே அறிவு உள்ளதோ அவற்றையே நான் எடுத்துரைக்கின்றேன். நான் திருக்குர்ஆனில் ஒரு வலிமையான ஆற்றலை கண்டுள்ளேன். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுவதில் ஒரு விநோதமான சிறப்பைக் கண்டுள்ளேன். வேறு எந்த மார்க்கத்திலும் அந்த சிறப்பும் ஆற்றலும் இல்லை. மேலும், (திருக்குர்ஆனை) உண்மையாகப் பின்பற்றக்கூடியவர் இறைநேசர் என்ற அந்தஸ்தை அடைந்து விடுகின்றார். இறைவன் அவருடன் தனது உரையாடலை மட்டும் நிகழ்த்துவதில்லை. மாறாக, வானம் மற்றும் பூமியை படைத்த அந்த இறைவன் நானே ஆவேன் என்பதை தனது செயலால் அவருக்கு காட்டி விடுகின்றான். அந்நிலையில் அந்த அடியாரின் ஈமான் உயரத்தில், தொலைதூரத்தில் இருக்கும் நட்சத்திரங்களையும் கடந்து சென்றுவிடுகின்றது.

இறைவன் என்னுடன் உரையாடுகின்றான். மேலும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான அடையாளங்களை அவன் என் கைகளின் மூலம் காட்டியுள்ளான். எனவே, நான் உலகின் அனைத்து நபிமார்களுக்கும், அனைத்து வேதங்களுக்கும் மரியாதை செலுத்துகின்றபோதிலும் உயிருள்ள வேதமாக இஸ்லாத்தை மட்டுமே ஏற்கின்றேன். ஏனெனில், அதன் மூலமாக என்னிடம் இறைவன் வெளிப்பட்டுள்ளான்.

அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்: எந்த நபருக்கு எனது இந்தக் கூற்றின் மீது ஐயம் இருக்குமோ அவர் இந்த விஷயங்களை ஆய்வு செய்யும் பொருட்டு என்னிடம் வந்து இரண்டு மாதம் தங்க வேண்டும். அந்த காலம் வரை அவருக்கு போதுமானதாக இருக்கும் அவருடைய அனைத்து செலவுகளுக்கும் நான் பொறுப்பேற்றுக் கொள்வேன். மேலும் கூறினார்கள்: என்னைப் பொருத்தவரை உயிருள்ள மார்க்கமும் உயிருள்ள மற்றும் புத்தம் புதிய வல்லமைகளின் காட்சிகளுடன் இறைவனை காட்டுகின்ற மார்க்கமுமே மார்க்கம் ஆகும். அவ்வாறல்லாமல் வாதம் மட்டுமே மார்க்கத்தின் உண்மைக்கு பொருளற்றதும் சான்றுகளற்றதாகவும் அமையும். (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 427- 428)

எவர்களெல்லாம் அன்னாரின் இந்த வாதத்திலிருந்து பயன் பெற இருந்தார்களோ அவர்கள் பயன் பெற்றார்கள். மேலும், வெற்றியடைந்தனர். அன்னாரிடம் வந்து தங்கினார்கள். மேலும் ஒப்புக் கொண்டார்கள்.

இன்றும் அன்னாருயை அறிவுப் புத்தகங்கள் உள்ளன. அன்னாரின் கருவூலங்கள் உள்ளன. மேலும் அவை ஏராளமானவர்களுக்கு இறைவனைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. எனவே நாம் அந்நியர்களுக்கு அதனைப் பற்றி எடுத்துக் கூறுகின்ற அதேநேரம் நாம் சுயமும் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். மேலும் அன்னாருடைய புத்தகங்களிலிருந்து பயன் பெற வேண்டும். அப்போதுதான் நாம் நமது பைஅத்தின் நோக்கங்களையும் முழுமை செய்ய முடியும்.

அடுத்து, திருக்குர்ஆனின் சிறப்புகளை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனின் நான்கு தனித்தன்மை வாய்ந்த சிறப்புகள் உள்ளன. அவற்றின் விளக்கம் இவையாகும்.

அதாவது திருக்குர்ஆனின் தனித்தன்மை வாய்ந்த சிறப்புகளில் ஒன்று சொற் செறிவு மற்றும் பொருள் செறிவும் ஆகும். அது மனிதனின் சொற் செறிவு மற்றும் பொருள் செறிவிலிருந்து முற்றிலும் தனித்தன்மை வாய்ந்ததும், வேறுபட்டதும் ஆகும். ஏனெனில், மனிதனின் சொற் செறிவு மற்றும் பொருள் செறிவின் மைதானம் மிகவும் குறுகியதாகும். ஒரு கூற்றில் மிகைப்படுத்துதல், பொய் அல்லது தேவையற்ற விஷயங்கள் சேர்க்கப்படாத வரை எந்த ஒரு மனிதரும் சொற் செறிவு மற்றும் பொருள் செறிவின் உயர் அந்தஸ்தில் நிலை பெற முடியாது. அல்லாஹ்வின் வேதம் இவற்றிலிருந்து முற்றிலும் தூயதாகும். அதில் எந்த கலப்படமும் இல்லை. திருக்குர்ஆனின் இரண்டாவது ஓர் அற்புதமான சிறப்பு என்னவென்றால் எந்த அளவிற்கு அது கதைகளை எடுத்துரைத்துள்ளதோ உள்ளபடியே அவை அனைத்தும் முன்னறிவிப்புகள் ஆகும். ஒவ்வோர் இடத்திலும் அவற்றைக் குறித்து சைகையும் செய்யப்பட்டுள்ளது.

இதுவும் திருக்குர்ஆனில் தென்படுகின்றது.

திருக்குர்ஆனின் மூன்றாவது அற்புதமான சிறப்பு என்னவென்றால், அதன் போதனை மனித இயல்பினை அதன் உச்சம் வரை சென்றடையச் செய்வதற்கான முழுமையான ஏற்பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் நம்பிக்கையின் அந்தஸ்தை பெறுவதற்கு என்னென்ன ஆதாரங்கள் மற்றும் அடையாளங்கள் மனிதனுக்கு அவசியமோ அவை அனைத்தும் அதில் உள்ளது. நான்காவது ஒரு மிகப் பெரிய சிறப்பு இதுவாகும். அதாவது, அது முழுமையாக பின்பற்றக்கூடியவரை இறைவனுடன் எந்த அளவிற்கு நெருங்கச் செய்துவிடுகின்றது என்றால் அந்த நபர் இறைவனுடன் உரையாடுகின்ற கண்ணியத்தை பெற்றுவிடுகின்றார். மேலும் அவரிடமிருந்து தெள்ளத் தெளிவான அடையாளங்கள் வெளிப்படுகின்றன.

மேலும் உளத் தூய்மையும், ஈமானிய உறுதிப்பாடும் அவருக்கு கிடைத்துவிடுகின்றது. மேலும் திருக்குர்ஆனின் இந்தக் கருத்து மிகவும் நினைவில் நிறுத்திக் கொள்வதற்கு தகுதி வாய்ந்தது ஆகும். அதாவது, முழுமையான நம்பிக்கையாளர் மீது இருக்கின்ற விண்ணின் அடையாளங்களின் அருட்கள் என்பது ஏக இறைவனின் செயலாகும். அதன் காரணமாக எவரும் தனது சிறப்பம்சமாக அதனை குறிப்பிட்டு விட முடியாது. முழுமையான நம்பிக்கையாளரின் தனது தனிப்பட்ட சிறப்பு என்பது இறையச்சம், தூய்மை, ஈமானிய ஆற்றல் மற்றும் உறுதிப்பாடு ஆகும். உதாரணமாக, ஒரு சுவற்றின் மீது சூரிய ஒளி விழும்பொழுது அந்த ஒளியை அந்த சுவரின் சிறப்பம்சமாக கொள்ள முடியாது. ஏனெனில், அது அதிலிருந்து பிரிந்தும் சென்று விட முடியும். மாறாக அந்த சுவரின் சிறப்பு என்பது இதுவாகும். அதாவது, அதனுடைய அடித்தளம் ஓர் உறுதிவாய்ந்த கல்லின் மீது உள்ளது. மேலும் அது எப்படிப்பட்ட உறுதி மற்றும் பலம் வாயந்த கட்டடமாக இருக்குமென்றால் எப்படிப்பட்ட வெள்ளம் வந்தாலும் சூறாவளிக் காற்று வீசினாலும், புயல் மழைப் பொழிந்தாலும் அந்த சுவரை அசைக்கக் கூட முடியாது.

(சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஸாயீன், தொகுதி 23, பக்கம் 268, அடிக்குறிப்பு)

ஆக, ஈமானின் நிலையும் அப்படிப்பட்ட நிலையாக இருக்க வேண்டும். திருக்குர்ஆனை இறைவனின் பரிசுத்த வேதமாகக் கருதி அதன்படி செயலாற்றுகின்ற நிலையும் இவ்வாறு இருக்க வேண்டும். இவையே நமது ஈமானை உறுதிப்படுத்துகின்றது. நம்மை இறைவனுடன் சேர்க்கின்றது. எந்தப் புயலும் எந்த சூறாவளியும் எந்த எதிர்ப்பும் மனிதனை தனது ஈமானிலிருந்து அசைக்கக் கூடாது. இதுவே மனிதனின் சிறப்பு ஆகும். எப்போதும் அவர் மீது இறைவனின் வேதத்தின் ஒளி விழுந்து கொண்டிருக்கும். மேலும், அதனை புரிவதற்கு அவர் முயற்சி செய்து கொண்டிருப்பார்.

பின்னர் அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆன் எப்படிப்பட்ட வேதம் என்றால் அதனைப் பின்பற்றுவதன் விளைவாக துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. இதனை விவரித்தவாறு மேலும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனின் அற்புதமான தாக்கங்களில் ஒன்று இதுவும் ஆகும். அதாவது, அதனை முழுமையாகப் பின்பற்றக் கூடியவர் ஒப்புக் கொள்ளப்படுகின்ற அந்தஸ்தை அடைகின்றனர். அவர்களின் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டு இறைவன் தனது புத்தம் புதிய மற்றும் மதிப்பச்சம் நிறைந்த உரையாடல் மூலமாக அவர்களுக்கு தகவல் கொடுக்கின்றான். மேலும், குறிப்பாக எதிரிகளுக்கு எதிராக அவர்களுக்கு உதவி செய்கின்றான். மேலும் ஆதரவு அளிக்கும் விதமாக தனது சிறப்பான மறைவான செய்திகளைக் குறித்து அவர்களுக்கு அறிவித்து கொடுக்கின்றான். (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஸாயீன், தொகுதி 23, பக்கம் 271, அடிக்குறிப்பு)

திருக்குர்ஆனில் அனைத்து வழிகாட்டல்களும் உள்ளன என்ற விஷயத்தை விவரித்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அரேபியாவின் இணை வைப்பாளர்களைப் போன்று இந்த நாட்டின் வேதம் வழங்கப்பட்டவர்களும் குற்றவாளிகளாக ஆகிவிட்டனர். கிறித்தவர்களோ பரிகாரம் எனும் விவகாரத்தின் மீது அழுத்தம் கொடுத்தும் அதன் மீது நம்பிக்கை கொண்டவாறும் தங்கள் மீது அனைத்து பாவங்களும் ஹலால் ஆகிவிட்டன என்று புரிந்து கொண்டிருக்கின்றனர்.

நாங்கள் குற்றம் செய்ததன் காரணமாக சில நாட்கள் மட்டுமே நரகத்தில் இருப்போம். சில நாட்களை விட அதிகமாக இருக்க மாட்டோம் என்று யூதர்கள் கூறிவந்தனர்.

இது குறித்து அல்லாஹ் கூறுகின்றான்:

ذٰلِكَ بِاَنَّهُمْ قَالُوْا لَنْ تَمَسَّنَا النَّارُ
اِلَّاۤ اَيَّامًا مَّعْدُوْدٰتٍ وَّ غَرَّهُمْ فِىْ دِيْنِهِمْ مَّا كَانُوْا يَفْتَرُوْنَ

நரகின் நெருப்பு சில நாட்கள் மட்டுமே எங்களைத் தீண்டும் என்ற அவர்களின் அந்தக் கூற்றின் காரணமாகவே அவர்களிடம் இந்த தைரியமும், வீரமும் உருவானது. அவர்கள் என்ன செயல்களை செய்கின்றார்களா அதற்கான தைரியம் எவ்வாறு உருவானது? அதற்கு காரணம் இதுதான். அதாவது, நான் ஓதிய இந்த வசனத்தில் அவர்கள் கூறுகின்றனர். நரகின் நெருப்பு எங்களைத் தீண்டினாலும் கூட சில நாட்கள் வரை மட்டுமே இருக்கும். அவர்கள் இட்டுக் கட்டிக் கூறி வரும் இந்தப் பொய்யுரையின் மீது அவர்கள் பெருமிதம் கொண்டே அவர்கள் இவ்வாறு எண்ணம் கொள்கின்றனர். ஆக, வேதம் வழங்கப்பட்டவர்களும், அரேபியாவின் இணை வைப்பாளர்களும் மிகவும் மோசமான வகையில் தீய நடத்தைக் கொண்டவர்களாக ஆகிவிட்டனர். தீமை செய்துவிட்டு தாங்கள் நன்மைக்கான பணியை செய்ததாக கருதி வந்தனர். குற்றச் செயல்களிலிருந்து அவர்கள் விலகியிருக்கவில்லை. பொது அமைதிக்கு பங்கம் விளைவித்து வந்தனர். அப்போது இறைவன் தனது நபியின் கையில் அரசாங்க அதிகாரத்தை வழங்கி அவர்களின் கரத்தின் மூலம் ஏழைகளை பாதுகாக்க விரும்பினான். மேலும் அரேபிய தேசம் சுதந்திரமான தேசமாக இருந்தது. மேலும், அந்த மக்கள் ஓர் அரசனின் அரசாங்கத்தின் கீழ் இருக்கவில்லை. எனவே ஒவ்வொரு பிரிவும் மிகவும் கட்டுப்பாடற்ற முறையிலும், துணிச்சலுடனும் வாழ்க்கையை கழித்து வந்தது. அவர்களுக்கு எந்த தண்டனைக்குமான சட்டமும் இல்லாமல் இருந்த காரணத்தினால் அவர்கள் அனுதினமும் குற்றங்களில் முன்னேறிக் கொண்டே சென்றனர். எனவே இறைவன் அந்த நாட்டின் மீது கருணை புரிந்தான். .........ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அந்த நாட்டிற்கு தூதராக மட்டும் அனுப்பவில்லை மாறாக, அந்த நாட்டின் அரசராகவும் ஆக்கிவிட்டான். மேலும் திருக்குர்ஆனை எப்படிப்பட்ட ஒரு முழுமையான சட்டமாக ஆக்கிவிட்டான் என்றால், அதில் இராணுவம் மற்றும் பொருளாதாரம் உட்பட அனைத்து வழிகாட்டல்களும் உள்ளன. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் அரசர் என்ற ரீதியில் அனைத்து பிரிவினர்களின் ஆட்சியாளராக இருந்தார்கள். மேலும் எல்லா மார்க்கத்தைச் சேர்ந்த மக்களும் தங்களது வழக்குகளில் அன்னாரிடமிருந்து தீர்ப்பைப் பெற்று வந்தனர். ஒருமுறை ஒரு முஸ்லிம் மற்றும் ஒரு யூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு வழக்கை எடுத்துக் கொண்டு வந்தது திருக்குர்ஆனிலிருந்து நிரூபணம் ஆகின்றது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆய்வு செய்த பிறகு யூதரை (அந்த வழக்கில்) உண்மையாளராக குறிப்பிட்டார்கள். மேலும் முஸ்லிமிற்கு எதிரான அவரது வாதம் சரியானது என்று தீர்ப்பு வழங்கினார்கள்.

ஆக, ஆழ்ந்து திருக்குர்ஆனை படிக்காத அறிவீனரான எதிரி எல்லா இடத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கு கீழ் கொண்டு வருகின்றார். ஆனால், அதுபோன்ற தண்டனைகள் என்பது கிலாஃபத் அதாவது அரசர் என்ற ரீதியில் வழங்கப்பட்டு வந்தன. (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஸாயீன், தொகுதி 23, பக்கம் 242 -243)

அடுத்து, திருக்குர்ஆன் மூலமாக பரிசுத்தத் தன்மையை பெற்றுக் கொள்ளுதல் என்ற கருத்து தொடர்பாக எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எந்த நோக்கத்தை முழுமை செய்வதற்காக ஒரு பொருள் உருவாக்கப்பட்டிருக்குமோ அந்த நோக்கத்தை அழகிய முறையில் முழுமை செய்வதையே ஒவ்வொரு பொருளின் மாபெரும் சிறப்பம்சமாக கருதப்படும் என்பது வெளிப்படையாகும். எடுத்துக்காட்டாக, ஒரு காளை மாடு நிலத்தை உழுவதற்காக வாங்கப்பட்டுள்ளதென்றால் அது உழுகின்ற பணியை அழகிய முறையில் நிறைவேற்றும்போதுதான் அது அந்த காளைமாட்டின் சிறப்பாக கருதப்படும். காளை மாடு உழுவதற்காக வாங்கப்படுகிறது என்றால் அது உழுவதற்காக மட்டுமே பயன்படுத்தப்படும். மேலும் நல்ல முறையில் உழுகின்ற காளை நல்லதாக கருதப்படும்.

அதேபோன்று இந்த விஷயம் வெளிப்படையாகும். அதாவது விண்ணின் மறையின் அசல் நோக்கம் இதுவாகவே இருக்க வேண்டும். அதாவது, அது தன்னை பின்பற்றக் கூடியவரை தனது போதனை, தாக்கம், சீர்திருத்த ஆற்றல் மற்றும் ஆன்மிக சிறப்புத் தன்மை ஆகியவற்றால் எல்லா வகையான பாவம் மற்றும் அசுத்தமான வாழ்க்கையிலிருந்தும் வெளியேற்றி ஒரு தூய வாழ்க்கையை அவருக்கு வழங்க வேண்டும். அடுத்து, தூய்மைபடுத்திய பிறகு இறைவனை அடையாளம் கண்டு கொள்வதற்காக ஒரு முழுமையான அகப்பார்வையை (அவருக்கு) வழங்க வேண்டும். மேலும் எல்லா இன்பங்களின் தலையாய ஊற்றாகிய அந்த தன்னிகரற்ற இருப்புடன் அன்பு மற்றும் நேசத்திற்கான தொடர்பை வழங்க வேண்டும். ஏனெனில், உண்மையில் இதே அன்புதான் இரட்சிப்பின் ஆணிவேராகும். மேலும், இதுவே அந்த சொர்க்கம் ஆகும். அதாவது அந்த சொர்க்கத்தில் நுழைந்த பிறகு அனைத்து தொலைவும், கசப்பும், துன்பமும், தண்டைனையும் நீங்கி விடுகின்றது. மேலும், சந்தேகத்திற்கு இடமின்றி எந்த வேதம் இறைவனைத் தேடுபவரை இந்த இலக்கை அடையச் செய்கின்றதோ அதுவே உயிருள்ள மற்றும் முழுமையான இல்ஹாமிய வேதம் ஆகும். மேலும், அவருடைய கீழான வாழ்க்கையிலிருந்து இரட்சிப்பு வழங்கி எந்த உண்மையான நேசத்திற்குரிய இறைவனை சந்திப்பது உண்மையில் அசல் இரட்சிப்பாக இருக்குமோ அவனுடன் சந்திக்க வைக்க வேண்டும்.மேலும், அனைத்து ஐயங்கள் மற்றும் சந்தேகங்களிலிருந்து விடுதலை வழங்கி அவர் தனது இறைவனை கண்டு கொள்ளும் வகையிலான முழுமையான இறைஞானத்தை அவருக்கு வழங்க வேண்டும்.

மேலும் இறைவனுடன் எப்படிப்பட்ட உறுதிவாய்ந்த தொடர்புகளை அவருக்கு வழங்க வேண்டும் என்றால் அவர் இறைவனின் நன்றியுணர்வுடையவராக ஆகிவிட வேண்டும். மேலும் இறைவன் அவர் மீது எவ்வாறான கருணை புரிய வேண்டும் என்றால், தன்னுடைய பல்வேறு வகையான உதவிகள், ஆதரவுகள் மற்றும் ஒத்தாசைகள் மூலமாக அவருக்கும் மற்றவர்களுக்கும் மத்தியில் வேறுபாட்டினை காட்டிவிட வேண்டும். மேலும் தம் ஞானத்தின் கதவுகளை அந்த அடியாருக்காக திறக்க வேண்டும். ஏதேனும் ஒரு வேதம் தனது இந்த அசல் கடமையை நிறைவேற்றாமல் தேவையற்ற வாதங்களின்

மூலம் தனது சிறப்பை நிரூபிக்க விரும்பினால் அதற்கான எடுத்துக்காட்டு இதுவாகும். அதாவது ஒருவர் தன்னை திறமையான மருத்துவர் என்று வாதிக்கின்றார். அவருக்கு முன் ஒரு நோயாளி கொண்டு வரப்பட்டு அவரை குணப்படுத்துங்கள் என்று கூறப்பட்டால் என்னால் அவரை குணப்படுத்த முடியாது. ஆனால் எனக்கு நல்ல மல்யுத்தம் செய்யத் தெரியும் என்று கூறுவது போன்றதாகும். அல்லது எனக்கு விண்ணியல் அறிவு அல்லது தத்துவயியல் அறிவு ஆகியவற்றில் நல்ல புலமை உள்ளது என்று கூறுவதைப் போன்றதாகும். இவ்வாறான நபர் ஏளனத்திற்குரியவராக கருதப்படுவார் என்பது வெளிப்படையாகும். மேதைகளின் பார்வையில் அத்தகைய நபர் தண்டனைக்குரியவர் ஆவார்.

இறை வேதமும், இறைத் தூதரும் உலகில் வரும்போது உலகை பாவத்திலிருந்தும், பாவத்திற்குரிய வாழ்விலிருந்தும் விடுபடச் செய்வதும், இறைவனுடன் தூய தொடர்பை நிலைபெறச் செய்வதும் அவர்களின் பெரும் நோக்கமாக உள்ளது. உலகக் கல்விகளை அவர்களுக்கு கற்றுக் கொடுப்பதும் உலகக் கண்டுபிடிப்புகளைக் குறித்து அவர்களுக்கு அறிவித்து கொடுப்பதும் அவர்களின் நோக்கமாக இருப்பதில்லை.

சுருக்கமாக, இறைவனைச் சந்திக்க வைப்பதும், இறையிருப்பைக் குறித்த நம்பிக்கையின் அந்தஸ்தை அடையச் செய்வதும், இறைவனின் மகத்துவம் மற்றும் கம்பீரத்தை உள்ளத்தில் அமரச் செய்து பாவம் செய்வதிலிருந்து தடுப்பதுமே இறைவேதத்தின் கடமையாகும். ஓர் அறிவுடைய மற்றும் நீதியினை விரும்பும் இயல்பு படைத்த நபரை பொருத்த வரை இந்த விஷயத்தை புரிந்து கொள்வது ஒன்றும் கடினமானதல்ல. ஏனெனில், உள்ளத்தின் அசுத்தங்களை அகற்ற முடியாத மற்றும் பாவத்தின் மீது வெறுப்பை உருவாக்குவதற்கு காரணியாக அமைகின்ற தூய மற்றும் முழுமையான ஞானத்தை வழங்காத வேதத்தை வைத்து நாம் என்ன செய்வது?

**நினைவிருக்கட்டும்! பாவத்தின் மீதான ஆர்வத்தை தூண்டுகின்ற தொழுநோய் மிகவும் அபாயகரமான தொழுநோய் ஆகும். இறைவனின் உயிருள்ள ஞானத்தின் வெளிப்பாடுகளும், அவனது கம்பீரம், மகத்துவம் மற்றும் அடையாளங்கள் மழையைப் போன்று இறங்காத வரையிலும், மேலும் ஓர் ஆடு தன்னிடமிருந்து வெறும் இரண்டு அடி தொலைவில் அருகில் சிங்கத்தை பார்ப்பதைப் போன்று இறைவனின் அச்சுறுத்தும் வல்லமைகளை மனிதன் நெருக்கமாக பார்க்காத வரையிலும் அந்த அபாயகரமான தொழு நோய் (மனிதனிடமிருந்து) நீங்க முடியாது.** மனிதன் பாவத்தின் அழிக்கக்கூடிய உணர்வுகளிலிருந்து தூய்மையாகுவது மனிதனுக்கு அவசியமாகும்.

கட்டுப்பாடற்ற முறையில் கொள்ளப்படும் மனயிச்சைகள் மின்னலைப் போன்று மனிதன் மீது விழுகின்றன. இறையச்சத்தின் சேமிப்பை ஒரு நொடியில் எரித்து விடுகின்றன. அவற்றை விட்டு விலக இறைவனுடைய மகத்துவம் பெரிய அளவில் அவனது உள்ளத்தில் அமர்ந்து விட வேண்டும். அந்த அசுத்தமான உணர்வுகள் வலிப்பு நோயைப் போன்று மீண்டும் மீண்டும் வருகின்றன. தீமைகளை விட்டு விலக்குகின்ற உணர்வுகளை உள்ளம் தொலைத்துவிடுகின்றது. தம்மால் செயற்கையாக உருவாக்கப்பட்ட கடவுள்களைக் கொண்டு இவற்றை அகற்ற முடியுமா என்ன? அல்லது தம்மால் உருவாக்கப்பட்ட சிந்தனைகளால் அவற்றை அமுக்கி விட முடியுமா என்ன? அல்லது எந்தத் துன்பம் தனது உள்ளத்தை தீண்டக் கூடவில்லையோ அவ்வாறான பரிகாரத்தால் இவை தடுக்கப்பட்டு விட முடியுமா என்ன? ஒருபோதும் முடியாது. இது ஒரு சாதாரண விஷயம் அல்ல. மாறாக ஓர் அறிவாளிக்கு அனைத்து விஷயங்களை விடவும் இது சிந்திக்கத்தக்கதாகும். இந்த வெட்கமின்மை மற்றும் தொடர்பின்மையின் விளைவால் ஏற்படக் கூடிய அழிவின் ஆணிவேர் என்பது பாவமும் தீமையாகும். அவற்றிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெறுவது? நிச்சய இன்பங்களை யூகங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதனால் விட்டுவிட முடியாது என்பது வெளிப்படையாகும்.

அதாவது (மனிதனுக்கு கிடைக்கின்ற) இன்பங்களில் சில உறுதியான இன்பங்கள் உள்ளன. இது நடக்கும். இன்ஷாஅல்லாஹ் நமக்கு கிடைக்கும்;பிறகு கிடைக்கும் என்று யூகம் கொள்ளுதல் ஆகும்.

எப்போது கிடைக்கும்? எப்படி கிடைக்கும்? என்று அதனை விட்டு விடமுடியாது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஆனால், ஓர் உறுதியான விஷயத்தை மற்றோர் உறுதியான விஷயத்தின் மூலமாக விட்டுவிடலாம். எடுத்துக்காட்டாக, காட்டைக் குறித்து உறுதியான நம்பிக்கை உள்ளது. அந்தக் காட்டில் மான்களை எளிதாக வேட்டையாடி விடலாம் என நாம் நம்புகின்றோம். இந்த நிச்சய உறுதியின் தூண்டுதலினால் நாம் அதில் அடியெடுத்து வைக்க முயல்கின்றோம். அப்போது அங்கு காட்டில் ஐம்பது சிங்கங்கள் இருக்கின்றன என்றும் ஆயிரக்கணக்கான கொடிய மலைப் பாம்புகள் உள்ளன; அவை வாயைத் திறந்து கொண்டு காத்திருக்கின்றன என்றும் மற்றொரு நிச்சய உறுதி ஏற்படும் என்றால் நாம் (அங்கு வேட்டையாட செல்லும்) நமது எண்ணத்தை கைவிட்டு விடுவோம். அதேபோன்று இவ்வாறான உறுதியான ஞானமின்றி பாவமும் விலகிச் செல்லாது. பாவத்தை நீக்குகின்ற வழிமுறை என்னவென்றால், நாம் இந்த பாவத்தை செய்தால் அவை நம்முடைய தனிப்பட்ட தற்காலிக இன்பங்களாக இருக்கும். ஆனால் நாம் ஒரு காட்டிற்கு வேட்டைக்கு செல்லும்போது அங்கு சிங்கங்களும் உள்ளன. மலைப்பாம்புகளும் உள்ளன. அவற்றின் மீதான அச்சம் நம்மை அங்கு வேட்டையாட விடாது. அதேபோன்றுதான் நாம் பாவத்தை விட்டு தப்பிக்க முடியும். அதாவது இறைவனுடைய பிடி மிகக் கடினமானது என்ற நிச்சய உறுதி ஏற்பட வேண்டும். நாம் பாவம் செய்தால் அவனது பிடியின் கீழ் வந்துவிடுவோம் என்ற உறுதி ஏற்பட வேண்டும். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

உலோகம் உலோகத்தால் தான் உடைகின்றது. இறைவனுடைய மகத்துவம் மற்றும் அச்சம் ஆகியவற்றின் உறுதி எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்றால் அது கவனமின்மை என்ற திரையை துண்டு துண்டாக்கி விட வேண்டும். மேலும் உடலில் எப்படிப்பட்ட ஒரு நடுக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றால் அது மரணத்தை மிக அருகில் காட்ட வேண்டும். மேலும் எப்படிப்பட்ட பயம் உள்ளத்தில் மிகைத்து நிற்க வேண்டும் என்றால் தீமையைத் தூண்டும் ஆன்மாவின் அனைத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு விட வேண்டும். மனிதன் ஒரு மறைவான கரத்தால் இறைவனின் பக்கம் இழுத்துச் செல்லப்பட வேண்டும். மனிதனுடைய உள்ளம் எப்படிப்பட்ட உறுதியால் நிரம்பிவிட வேண்டும் என்றால், நிச்சயமாக இறைவன் இருக்கின்றான்;அவன் தைரியமாக குற்றம் செய்பவர்களுக்கு தண்டனை வழங்காமல் விடுவதில்லை என்ற உறுதி இருக்க வேண்டும்.

எனவே ஓர் உண்மையான தூய்மையைத் தேடும் ஒருவரால் இந்த தேவையைத் நிறைவேற்றாத வேதத்தை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்?

ஆக, நான் அனைவருக்கும் தெளிவுபடுத்த விரும்பும் விஷயம் என்னவென்றால், இந்தத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய வேதம் திருக்குர்ஆன் மட்டுமே ஆகும். இதன் மூலமாக இறைவன் பக்கம் மனிதனுக்கு ஓர் ஈர்ப்பு உருவாகின்றது. மேலும், உலகத்தின் மீதான


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

நேசம் தணிந்து விடுகின்றது. திருக்குர்ஆனை பின்பற்றுவதினால் மிகவும் நுட்பத்திலும் நுட்பமாக இருக்கக் கூடிய அந்த இறைவன் தன்னை அவருக்கு வெளிப்படுத்தி விடுகின்றான். வல்லமை மிக்க அந்த இறைவனின் ஆற்றல்களை மற்ற சமுதாயங்கள் அறியாது. திருக்குர்ஆனைப் பின்பற்றும் மனிதருக்கு இறைவனே அதனைக் காட்டிக் கொடுக்கின்றான் என்ற சொற்றொடர் நினைவில் கொள்ளத் தக்கதாகும். மேலும், வானவர்களின் உலகில் அந்த மனிதனை அவன் உலா வரச் செய்கின்றான். மேலும் நான் இருக்கின்றேன் என்ற குரலின் மூலமாக அந்த இறைவனே தனது இருப்பைக் குறித்து செய்தி வழங்குகின்றான்.

ஆக, திருக்குர்ஆனைக் குறித்து இந்த அறிவும், புரிதலுமே இருக்க வேண்டும். இது இந்த போதனையின் செயல் ரீதியான அம்சம் ஆகும். அது (அஹ்மதிகளாகிய) நம் மூலமாக வெளிப்பட வேண்டும். அவ்வாறில்லையென்றால் மற்ற மார்க்கங்களைப் போன்று நமது ஈமானிய வாதமும் வெறும் வாதமாகவே இருக்கும்.

இவ்வேதம் சீர்திருத்துகின்றது. பிற வேதங்கள் சீர்திருத்துவதில்லை என்று தற்போது இங்கு அன்னார் (அலை) கூறியுள்ளார்கள். ஏனெனில், அவற்றின் போதனைகள் முழுமையானவை அல்ல. எனவே அவை சீர்திருத்துவதில்லை. நாம் திருக்குர்ஆனை ஏற்றுக் கொண்ட நிலையில் நம்மிடம் சீர்திருத்தம் ஏற்படவில்லையென்றால் தவறு நம்முடையதாகும். ஏனெனில் அன்னார் (அலை) கூறியதுபோன்று முழுமையாகப் பின்பற்றுவது அவசியம் ஆகும். முழுமையாகப் பின்பற்றாவிட்டால் பின்னர் எவ்வாறு சீர்திருத்தம் ஏற்படும்? அதன்படி அமல் செய்யவில்லையென்றால் எவ்வாறு சீர்திருத்தம் ஏற்படும்?

நாம் முழுமையாக பின்பற்றக் கூடியவர்களாகத் திகழ்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் அதற்கான நற்பேறை ( நமக்கு ) வழங்குவானாக.

அடுத்து, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நாம் கண்டுணர்ந்த, எமது சொந்த அனுபவம் மற்றும் நமக்கு முன்னால் கடந்து சென்ற அனைவரின் சாட்சியமும் என்னவென்றால் திருக்குர்ஆன் தனது ஆன்மிக சிறப்பு மற்றும் தனது தனிப்பட்ட ஒளியால் தன்னை உண்மையாக பின்பற்றுபவர்களை தனது பக்கம் ஈர்க்கின்றது. அவருடைய உள்ளத்திற்கு ஒளியூட்டுகின்றது. மேலும், பெரும் பெரும் அடையாளங்களைக் காட்டி இறைவனுடன் எப்படிப்பட்ட தொடர்பை ஏற்படுத்துகின்றது என்றால் துண்டு துண்டாக வெட்ட விரும்பும் வாளினால் கூட அந்தத் தொடர்பு முறிந்துவிடாது. அது உள்ளத்தின் கண்களைத் திறக்கின்றது. பாவம் எனும் அசுத்த ஊற்றை அடைத்து விடுகின்றது. இறைவனுடைய இனிய உரையாடல் மூலமாக கண்ணியமளிக்கின்றது. மறைவான ஞானங்களை வழங்குகின்றது. துஆ ஒப்புக் கொள்ளப்படுவது குறித்து தனது சொற்களால் செய்தி வழங்குகின்றது. திருக்குர்ஆனை உண்மையான முறையில் பின்பற்றுபவரை எதிர்க்கும் ஒவ்வொருவரின் மீதும் இறைவன் தனது அச்சுறுத்துகின்ற அடையாளங்களை வெளிப்படுத்தி தனது வேதத்தை பின்பற்றுகின்ற அந்த அடியாருடன் தான் இருப்பதாக தெரிவித்துவிடுகின்றான்.

(சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஸாயின் தொகுதி 23, பக்கம் : 305-309)

எனவே (திருக்குர்ஆனை) உண்மையான முறையில் பின்பற்றுபவராக இருப்பது என்பது (அதற்கான) அடிப்படை நிபந்தனை ஆகும்.

திருக்குர்ஆன் ஷிர்க் எனும் இணை வைத்தலில் இருந்து இரட்சிப்பு வழங்கும் வழிமுறையாக இருக்கின்றது என்பதை விவரித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அரேபியா, பாரசீகம், எகிப்து, சிரியா, இந்தியா, ஆஃப்கானிஸ்தான், காஷ்மீர் ஆகிய நகரங்களில் திருக்குர்ஆன் ஏகத்துவத்தின் விதையை விதைத்தது. மேலும் பெரும்பாலான நகரங்களிலிலிருந்து சிலை வணக்கம் மற்றும் ஏனைய படைப்பினங்களை வணங்கும் முறைகளை வேரடி மண்ணுடன் பிடுங்கி எறிந்துவிட்டது. இது எத்தகைய நடவடிக்கை என்றால் இதற்கு நிகரான ஒன்றை வேறு எந்த ஒரு காலத்திலும் பார்க்க முடியாது. (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஸாயின் தொகுதி 23, பக்கம் : 72)

இந்த நாடுகளில் இஸ்லாம் துவக்கத்தில் பரவியபோது இணை வைத்தல் அழிந்து போனது. திருக்குர்ஆனின் போதனைகளின்படி அமல் செய்ததன் விளைவாகவே இது நிகழ்ந்தது. எனவே நம்முடைய முன்னோர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். ஆனால் நாம் அதன்படி செயல்படவில்லையென்றால் நாம் மீண்டும் அதே அறியாமைக்கு செல்கின்றோம் என்று பொருள்படும்.

திருக்குர்ஆனுடைய போதனை உயரிய அந்தஸ்தைக் கொண்ட போதனை ஆகும் என்பதைக் குறித்து கூறியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எந்த வேதம் ஆரம்பகால படைப்பினங்களின் காலத்தில் தோன்றியதாக இருக்குமோ அது முழுமையான வேதநூலாக இருக்காது என்று அதைக் குறித்து உறுதியாக பகுத்தறிவு பரிந்துரைக்கின்றது. ஆரம்பக் காலத்தில் வந்த வேதங்கள் முழுமையானதாக இருக்காது என்று பகுத்தறிவு ஒப்புக் கொள்கின்றது. இன்னும் கூறப்போனால், அது ஆரம்பக் கல்வியை குழந்தைகளுக்கு கற்பிக்கும் ஆசிரியரைப் போன்று இருக்கும். குழந்தைகளுக்கு அலிஃப், பே போன்ற சொற்களை அந்த ஆசிரியர் கற்றுக் கொடுக்கின்றார். ஆரம்பக் கல்விக்கு அதிக தகுதிக்கான தேவை கிடையாது. குழந்தைகளுக்கு துவக்கக் கல்வியைக் கற்பிக்க வேண்டும் என்றால், குழந்தைகளுக்கு A,B,C போன்றவற்றை கற்பிக்க வேண்டும் என்றால், அலிஃப், பே, ஜீம் போன்றவற்றைக் கற்பிக்க வேண்டும் என்றால் அதற்கு அதிக தகுதி பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், மனிதனின் அனுபவம் முன்னேற்றம் அடைந்திருக்கும் காலத்திலும், மனித இனம் பல்வேறு வகையான தவறுகளில் விழுந்திருக்கும் காலத்திலும் நுட்பமான போதனையின் தேவை ஏற்பட்டது. குறிப்பாக வழிகேட்டின் இருள் உலகில் பரவியபோதும், மனித உள்ளங்கள் பல்வேறு வகையான அறிவுசார்ந்த மற்றும் செயல்சார்ந்த இருளில் மூழ்கியபோதும் ஓர் உயரிய மற்றும் முழுமையான போதனையின் தேவை ஏற்பட்டது. அப்போது திருக்குர்ஆன் இறங்கியது. ஆனால் ஆரம்பக் கால வேதங்களுக்கு உயர்ந்த தகுதியைக் கொண்ட தேவை இருக்கவில்லை. ஏனெனில், அப்போது மனித உள்ளங்கள் சாதாரணமானவையாக இருந்தன. அவற்றில் இன்னும் இருளும், வழிகேடும் குடிகொண்டிருக்கவில்லை. ஆனால் உச்சபட்ச அந்த வழிகேட்டின் காலத்தில் வெளிப்பட்ட அந்த வேதத்திற்கு உயரிய போதனையின் தேவை இருந்தது. எந்த மக்களின் உள்ளங்களில் குழப்பமான கொள்கைகள் உறுதியாக குடி கொண்டு இருந்தனவோ மேலும் எவர்களிடம் அருவருக்கத்தக்க செயல்கள் அவர்களின் பழக்கவழக்கத்தின் ஒரு கட்டளையின் வடிவில் சென்றிருந்தனவோ அத்தகைய மக்களை சீர்திருத்துவதற்காக அது இறங்கியது. (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஸாயீன், தொகுதி 23, பக்கம் 70, அடிக்குறிப்பு)

மனிதனின் மூளை முதிர்ச்சி அடைந்தபோது, அவன் புரிந்து கொள்ள தொடங்கியிருந்தபோது திருக்குர்ஆனின் போதனை இறங்கியது. தீமைகளும் தனது உச்சபட்ச நிலையை அடைந்திருந்தன. மனிதன் அவற்றில் மூழ்கிக் கொண்டிருந்தான். அப்போது அவனது மூளைக்கேற்ப போதனையும் இறங்கிவிட்டது.

திருக்குர்ஆன் உலகளாவிய வேதமாக திகழ்வது குறித்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நினைவிற் கொள்ளுங்கள்! படைப்பினங்களின் ஆரம்பக் காலகட்டத்திலும் மனிதகுலத்திற்கு ஓர் இல்ஹாமிய வேதம் கிடைத்தது என்பது முற்றிலும் சரியானது ஆகும். ஆரம்பக் காலகட்டத்தில் மனிதனுக்கு ஒரேயோர் இல்ஹாமிய வேதம் மட்டும் ஏன் கொடுக்கப்பட்டது? ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனித்தனியாக ஏன் வேதம் கொடுக்கப்படவில்லை என்று இங்கு எவராவது கேள்வி கேட்டால் அதற்குரிய பதில் இதுவாகும். அதாவது ஆரம்பக் காலத்தில் மனிதர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. சமுதாயம் என்று அழைக்கப்படுவதைக் காட்டிலும் அந்த மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. எனவே ஒரே வேதம் அவர்களுக்கு போதுமானதாக இருந்தது. பின்னர் மனிதன் பரவிவிட்டபோது பூமியின் ஒவ்வொரு நிலத்தின் துண்டிலும் குடியிருந்தவர்கள் சமுதாயம் என்று

அழைக்கப்பட்டபோது, நீண்ட தொலை தூர பயணம் இன்றி ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தின் நிலையை அறியமுடியாததாக இருந்தபோது அவ்வாறான காலகட்டத்தில் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனித் தனித் தூதரும், இல்ஹாமிய வேதமும் அருளப்பட வேண்டும் என இறைவனின் ஞானமும், பொருத்தமான நடவடிக்கைகளும் விரும்பின. எனவே அவ்வாறே நிகழ்ந்தது. பிறகு உலகில் மனிதர்களின் எண்ணிக்கை அதிகரித்தபோது, சந்திப்பதற்கான வழிமுறைகள் திறந்தபோது, ஒரு தேசத்தில் வசிப்பவர்கள் மற்றொரு தேசத்தில் வசிப்பவர்களை சந்திக்க வழிவகைகள் தோன்றிபோது, இன்ன இன்ன நிலங்களில் மனித இனம் வசிக்கின்றது என தெரியவந்த காலகட்டத்தில் அவர்கள் அனைவரையும் மீண்டும் ஒரே சமுதாயமாக ஆக்க வேண்டும் என இறைவன் நாடினான். பிரிவினைக்குப் பிறகு மீண்டும் அவர்களை ஒன்று சேர்க்கவேண்டும் என்று அவன் விரும்பினான். எனவே அனைத்து நாடுகளுக்கும் ஒரே வேதத்தை இறைவன் அனுப்பினான். மேலும் இந்த வேதம் பல்வேறு நாடுகளுக்கு எந்தெந்த காலக்கட்டத்தில் வந்து சேருமோ அப்போது அதனை ஏற்றுக் கொள்வதும், அதன் மீது நம்பிக்கை கொள்வதும் அவர்கள் மீது கடமையாகும் என்று அந்த வேதத்தில் இறைவன் கட்டளையிட்டான். அனைத்து நாடுகளுக்கு மத்தியிலும் பரஸ்பரம் உறவை ஏற்படுத்த வந்த அந்த வேதம் திருக்குர்ஆன் ஆகும்.

திருக்குர்ஆனிற்கு முன்னால் வந்த அனைத்து வேதங்களும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காகவே வந்தன. அதாவது குறிப்பிட்ட ஏதேனும் சமுதாயத்திற்கு மட்டுமே வந்தது. எடுத்துக்காட்டாக, சிரியா, பாரசீகம், சீனா, இந்தியா, எகிப்து, ரோம் ஆகியவை சமுதாயங்களாக இருந்தன. அவர்களுக்காக வந்த வேதங்களும், தூதர்களும் தமது சமுதாயத்திற்குள் மட்டுமே உட்பட்டு இருந்தனர். மற்ற சமுதாயங்களுடன் அவர்களுக்கு எந்த தொடர்பும், இணைப்பும் இருக்கவில்லை. ஆக, இவை அனைத்திற்கும் பிறகு திருக்குர்ஆன் இறங்கியது. அது உலகளாவிய வேதமாக உள்ளது. அது எந்த ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டுமே உரியது அல்ல. மாறாக, அது அனைத்து சமுதாயங்களுக்கும் உரியதாகும். இவ்வாறு திருக்குர்ஆன் எப்படிப்பட்ட ஒரு சமுதாயத்திற்கு வந்துள்ளது என்றால், அது கொஞ்சம் கொஞ்சமாக ஒரே சமுதாயமாக ஆக்க விரும்புகின்றது. காலத்தைப் பொருத்த வரை பலதரப்பட்ட சமுதாயங்களை ஒற்றுமையாக வைத்திருப்பதற்கான வழிவகைகளைக் கொண்ட காலமாக அது இருந்தது. ஒரே சமுதாயமாக ஆகுவதற்கு அசல் ஆணிவேராக பரஸ்பர சந்திப்பு உள்ளது. இது எந்த அளவிற்கு எளிதாகிவிட்டதென்றால், பல வருட காலப் பயணத்தை சில நாட்களில் கடந்து விட முடியும். செய்திகளை அனுப்புவதற்கு எத்தகைய வழிமுறைகள் உருவாகிவிட்டன என்றால், தொலை தூரத்திலுள்ள ஒரு நாட்டின் செய்தி ஒரு வருட காலத்தில் வந்துசேரமுடியாமல் இருந்த செய்தி தற்போது ஒரு மணி நேரத்தில் வந்தடைந்துவிடுகிறது. தற்போதைய காலகட்டத்தில் எப்படிப்பட்ட மாபெரும் புரட்சி ஏற்பட்டுள்ளதென்றால் மேலும் நாகரீக நதியோட்டம் எப்படிப்பட்ட திசையை நோக்கி செல்கின்றது என்றால் முழு உலகிலும் பரவியுள்ள அனைத்து சமுதாயங்களையும் ஒரே சமுதாயமாக ஆக்குவதற்கு இறைவன் நாடியுள்ளான் என்பது தெளிவாக தெரிகின்றது. ஆயிரக்கணக்கான வருடங்களாக பிரிந்துபோய் இருந்தவர்களை மீண்டும் ஒன்றிணைக்க இறைவன் விரும்புகின்றான். இந்த செய்தி திருக்குர்ஆனில் உள்ளது. மேலும் திருக்குர்ஆன் தான் பகிரங்கமான முறையில் இந்த வாதத்தை செய்துள்ளது. அது உலகிலுள்ள அனைத்து சமுதாயங்களுக்காகவும் வந்துள்ளதாக கூறுகிறது. அல்லாஹ் திருக்குர்ஆனில்

يٰۤاَيُّهَا النَّاسُ اِنِّىْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعًا

என்று கூறுகின்றான்.

அதாவது, நான் உங்கள் அனைவருக்காவும் இறைவன் புறமிருந்து தூதராக வந்துள்ளேன் என்று நீர் அனைத்து மக்களிடமும் கூறுவீராக! மேலும் திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ

அதாவது நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் ஓர் அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம்.

لِيَكُوْنَ لِلْعٰلَمِيْنَ نَذِيْرًا

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்:

அதாவது நாம் உம்மை எதற்காக அனுப்பியுள்ளோம் என்றால், முழு உலகிற்கும் நீர் எச்சரிக்கை செய்வீராக! திருக்குர்ஆனிற்கு முன்னர் எந்த ஓர் இல்ஹாமிய வேதமும் இந்த வாதத்தை செய்யவில்லை என்பதை நாம் மிக அழுத்தத்துடன் கூறுகின்றோம். ஒவ்வொருவரும் தமது தூதுச் செய்தியை தமது சமுதாயத்திற்குட்பட்டே வைத்திருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் எந்த நபியை கிறித்தவர்கள் கடவுளாக ஆக்கிவிட்டார்களோ அவருடைய நாவிலிருந்தும் கூட நான் இஸ்ரேவலரின் ஆடுகளைத் தவிர வேறு எவற்றின் பக்கமும் அனுப்பப்படவில்லை என்ற வார்த்தையே வெளிப்பட்டது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பைபுளில் இதைத்தான் கூறியுள்ளார்கள். திருக்குர்ஆனின் இந்த வாதம் முழு தப்லீக்கின் காலத்தில் கூறப்பட்டுள்ளது என்று சூழ்நிலையும் சாட்சி பகிர்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்தில் பொது தப்லீக்கிற்கான வாசல் திறக்கப்பட்டிருந்தது. (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஸாயீன், தொகுதி 23, பக்கம்74-77)

திருக்குர்ஆன் இறங்க நான்கு காரணங்கள் இருந்தன என்பதைக் குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு பொருளுக்கும் நான்கு காரண காரியங்கள் உள்ளன. ஒன்று, ஒரு வினையைச் செய்யக் கூடியவர் யார்? என்பதாகும். அதற்கான காரணங்கள் பார்க்கப்படுகின்றன. அடுத்து, அதற்கான வெளிப்படையான, செயல் ரீதியான காரணங்கள் என்ன என்பதாகும்?. அடுத்து, அதனுடைய உலகப் பயன் என்ன என்பதாகும்?. அடுத்து அதற்கான அசல் நோக்கம் என்ன என்பதாகும். அதாவது அந்தப் பொருளின் அடிப்படையான நோக்கம் மற்றும் ஒட்டுமொத்த காரணம் என்ன? என்பதாகும்.

இந்த இடத்தில் அன்னார் (அலை) திருக்குர்ஆனின் நான்கு காரணங்களை எடுத்துக் கூறியுள்ளார்கள். கூறினார்கள். இதனுடைய இல்லத்தே ஃபாயிலி. அதாவது இந்த வேதத்தை இறக்கியவன் الٓمّٓ ஆவான். என்னைப் பொருத்தவரை இதன் பொருள்: اَنَا اللّٰهُ اَعْلَمُ ஆகும். அதாவது நான் அல்லாஹ். நான் அனைவரையும் விட நன்கு அறிந்தவன் என்பதாகும். அதாவது மனிதப் படைப்பின் நோக்கத்தை அல்லாஹ் அறிவான். அடுத்து, இல்லத்தே மாதி அதாவது இந்த வேதத்தின் பயன் என்பது ذٰلِكَ الْكِتٰبُ ஆகும். பொருள்: எல்லாரையும் விட அதிக ஞானம் படைத்த இறைவனிடமிருந்து இந்த வேதம் இறங்கியுள்ளது. இதன்படி அமல் செய்து பெரும் பலன்களை அடைய முடியும். அடுத்து இல்லத்தே சூரி இந்த வேதம் அருளப்பட்டதற்கான வெளிப்படையான காரணம் என்பது لَا رَيْبَ فِيْهِ ஆகும். அதாவது இவ்வேதத்தின் சிறப்பும் முழுமையும் என்னவென்றால் இதில் எவ்வித ஐயமும், சந்தேகமும் கிடையாது என்பதாகும். இது எப்படிப்பட்ட அழகிய போதனை என்றால் இதனுடன் எதுவும் போட்டியிட முடியாது. இதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் உறுதிவாய்ந்தவையாகவும், இதன் வாதங்கள் சான்றுகள் மிக்கதாகவும், ஒளிமயமானதாகவும் இருக்கின்றன. அடுத்து, இல்லத்தே காயி, அதாவது அசல் நோக்கம் هُدًى لِّلْمُتَّقِيْنَ ஆகும். அதாவது இவ்வேதம் அருளப்பட்டதன் உண்மையான நோக்கம் மற்றும் குறிக்கோள் என்னவென்றால், இறையச்சமுடையவர்களுக்கு நேர்வழிகாட்ட வேண்டும் என்பதாகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 306 - 307)

இதுதான் ஓர் உண்மையான மார்க்க மறையின் நோக்கமாக இருக்க வேண்டும்.

திருக்குர்ஆனின் சூரா பக்ராவின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது வசனங்களுக்கு மொழியாக்கம் செய்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகின்றார்கள்:

இறையச்சம் என்பது எத்தகைய உயரிய அந்தஸ்தைக் கொண்ட அவசியமான விஷயமாக உள்ளதென்றால் திருக்குர்ஆன் இறங்கியதற்கான அடிப்படைக் காரணமாக அது ஆக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இரண்டாவது சூராவை துவங்கும்போது

الٓمّٓ ۝ ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ ۛ فِيْهِ ۛ هُدًى لِّلْمُتَّقِيْنَ ۝

என்றே கூறியுள்ளான்.

எனது கொள்கை என்னவென்றால், திருக்குர்ஆனின் இந்த வரிசைக்கிரமம்

பெரும் அந்தஸ்தைக் கொண்டுள்ளது. இறைவன் இதில் நான்கு காரணங்களைக் குறிப்பிட்டுள்ளான். அதாவது நான்கு காரண, காரியங்களை குறிப்பிட்டுள்ளான். இல்லத்தே ஃபாயிலி, இல்லத்தே மாதி இல்லத்தே சூரி மற்றும் இல்லத்தே காயி போன்றவை ஆகும். ஒவ்வொரு பொருளுடனும் இந்த நான்கு காரண காரியங்கள் தான் உள்ளன. திருக்குர்ஆன் மிகவும் முழுமைத் தன்மையுடன் இதனை வெளிப்படுத்துகின்றது.

ذٰلِكَ الْكِتٰبُ என்பதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என்னவென்றால், மிகவும் ஞானமிக்க அல்லாஹ் இந்த வேதத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறக்கியுள்ளான். அதாவது அதை செய்யக் கூடியவன் இறைவன் ஆவான். لَا رَيْبَ فِيْهِ என்பது பௌதீக காரணி என்று கூறப்பட்டுள்ளது. அதாவது திருக்குர்ஆன் இதனை பௌதீகக் காரணமாகக் கூறுகிறது. அதாவது பௌதீக நிலையில் நம்மிடத்தில் ஒரு வேதம் உள்ளது. அந்த வேதத்தின்படி அமல் செய்து மனிதன் தனது நோக்கத்தை அடைந்து கொள்ள முடியும். இல்லத்தே சூரி என்பது لَا رَيْبَ فِيْهِ ஆகும். எல்லா விஷயங்களிலும் ஐயமும், சந்தேகமும், தவறான யூகங்களும் தோன்ற முடியும். ஆனால், திருக்குர்ஆன் எப்படிப்பட்ட வேதம் என்றால் அதில் எவ்வித ஐயமுமில்லை. எந்த சந்தேகமும் இல்லை. لَا رَيْبَ என்பது அதற்காகவே உள்ளது.

தற்போது அல்லாஹ் இந்த வேதத்தின் சிறப்பாக لَا رَيْبَ فِيْهِ என்று கூறியிருக்கும்போது இயல்பாகவே ஒவ்வொரு நல்இயல்பு கொண்ட மற்றும் நற்பேறு கொண்ட மனிதனின் ஆன்மாவும் துள்ளிக் குதிக்கும். மேலும் அதன் வழிகாட்டல்களின்படி செயல்படுவதற்கு ஆசை கொள்ளும். திருக்குர்ஆனின் ஒளிமயமான மற்றும் பரிசுத்தமான சிறப்பு உலகின் முன்னால் எடுத்துரைக்கப்படுவதில்லை என்பதை நாம் மிக வேதனையுடன் கூறுகின்றோம். திருக்குர்ஆனின் சிறப்புகளும், அதன் மேன்மைகளும் அதன் அழகும் தன்னகத்தே எப்படிப்பட்ட ஓர் ஈர்ப்பு சக்தியைக் கொண்டுள்ளது என்றால் தன்னையும் அறியாமல் உள்ளம் அதன் பக்கம் சென்று விடுகின்றது.

எடுத்துக்காட்டாக, ஒரு நறுமணம் கொண்ட தோட்டத்தை புகழும்போதும், அதன் நறுமணம் மிக்க மரங்களையும், உள்ளத்திற்கு புத்துணர்வு வழங்கக்கூடிய செடிகள், ஒளிமயமான, மற்றும் தூய்மையான நீரைக் கொண்ட பாய்ந்தோடும் நதிகள் மற்றும் ஓடைகளையும் நினைவுகூரப்படும்போதும் அந்தத் தோட்டத்தை வலம் வரவேண்டும் என்றும். அதிலிருந்து இன்பமடைய வேண்டும் என்றும், ஒவ்வொரு நபரும் உள்ளத்தால் விருப்பம் கொள்வார். நாள்பட்ட மற்றும் அழிக்கக்கூடிய நோய்களை குணமளிக்கக் கூடிய சில ஊற்றுகள் அதில் ஓடுகின்றன என்றும் கூறப்பட்டால் பின்னர் இன்னும் கூடுதலான உத்வேகம் மற்றும் தேடலுடன் மக்கள் அங்கு செல்வார்கள். அதேபோன்று திருக்குர்ஆனின் சிறப்புகள் மற்றும் மேன்மைகளை மிகவும் அழகிய முறையிலும், தாக்கம் மிகுந்த சொற்களிலும் எடுத்துரைக்கப்பட்டால் பின்னர் ஆன்மா முழுமையான உத்வேகத்துடன் அதன் பக்கம் ஓடோடி சென்றுவிடும். உண்மையில் ஆன்மாவிற்கான ஆறுதலும், நிம்மதிக்கான ஏற்பாடும் மேலும் ஆன்மாவின் உண்மையான தேவை எந்த விஷயத்தின் மூலம் முழுமையடைகின்றதோ அந்த விஷயமும் திருக்குர்ஆனிலேயே உள்ளது.

எனவே அல்லாஹ் هُدًى لِّلْمُتَّقِيْنَ என்று கூறியுள்ளான். இறையச்சமுடையவர்களுக்கு நேர்வழி காட்டக் கூடியதாகும். மற்றோர் இடத்தில் لَا يَمَسُّهٗٓ اِلَّا الْمُطَهَّرُوْنَ என்று கூறியுள்ளான். பொருள்: தூய்மையாக்கப்பட்டவர்களைத் தவிர வேறு எவரும் அதனை தொட முடியாது.

கூறினார்கள்: هُدًى لِّلْمُتَّقِيْنَ என்பதில் கூறப்பட்டுள்ள அதே இறையச்சமுடையவர்கள் என்பதுதான் இந்த வசனத்தின் பொருளாகும். திருக்குர்ஆன் ஞானங்கள் வெளிப்படுவதற்கு இறையச்சம் நிபந்தனையாகும் என்று இதிலிருந்து தெரிய வருகின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 424 - 425, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு)

ஆனால் இறையச்சமற்ற இன்றைய பெயர்தாங்கி ஆலிம்கள் அதன் போதனைகளை எந்த வடிவில் எடுத்து வைத்துள்ளனர் என்றால் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு அதன் போதனைகள் மீது மேலும் ஆட்சேபனை செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. ஆனால், இன்று இது அஹ்மதிகளாகிய நமது பணியாகும். அதாவது, எல்லா வகையான நோய்களுக்கும் சிகிச்சையாக திருக்குர்ஆனே உள்ளது என்றும் அதனை இறக்கியவன் நோக்கமுடையதாக அதனை உருவாக்கி உலகின் சீர்திருத்தத்திற்காக அனுப்பியுள்ளான் என்றும் நாம் உலகிற்கு கூறவேண்டும். இறையச்சத்தின் வழி நடந்தவாறு அதன்படி அமல் செய்வதற்கு அல்லாஹ் நமக்கு நற்பேறு வழங்குவானாக.

மிக ஆழமான கருத்துகள் ஆகும். மிகவும் கவனமாக கேட்க வேண்டிய விஷயங்கள் ஆகும். மிகவும் கவனத்துடன் அதன்படி அமல் செய்வது அவசியம் ஆகும்.திருக்குர்ஆனை மிகவும் சீர்தூக்கி நாம் ஓத வேண்டும். தற்போது நான் சில துஆவிற்கான அறிவிப்பு செய்ய விரும்புகின்றேன்.

பங்களாதேஷின் ஆண்டு மாநாடு இன்றைய நாட்களில் நடைபெற்று வருகின்றது. இன்றுதான் முதல் நாளாகும். ஆனால், அங்கு எதிரிகள் தாக்குதல் நடத்திவிட்டனர். மாநாட்டுத் திடலிலும் தாக்குதல் நடத்தியுள்ளனர். பல மக்கள் காயமடைந்தும் இருக்கின்றனர் என்பது எனது எண்ணமாகும். அதாவது வெளியிலிருந்து சிலர் எவ்வாறு தாக்குதல் நடத்தினர் என்றால் அதனால் சிலர் காயமடைந்துள்ளனர். இன்னும் சிலர் மிகக் கடுமையாக காயமடைந்தும் உள்ளனர். பின்னர் அந்தப் பகுதியில் அஹ்மதிகளாக இருக்கும் சில மக்களின் வீடுகளையும் எரித்து வருகின்றனர். இது தற்போது வரை வந்துள்ள தகவலுக்கு ஏற்ப ஆகும். எவ்வளவு சேதம் ஏற்பட்டுள்ளது என்பது தொடர்பாக இன்னும் முழுமையான மதிப்பீடு கிடைக்கவில்லை. அவர்களின் தீங்குகளிலிருந்தும் அல்லாஹ் அஹ்மதிகளை பாதுகாப்பாக வைப்பானாக. மேலும் அவர்களை பிடிப்பதற்கான ஏற்பாட்டையும் செய்வானாக. இனி அவர்களின் நேர்வழிக்காக எந்த துஆவும் செய்ய முடியாது.

اَللّٰهُمَّ مَزِّقْهُمْ كُلَّ مُمَزَّقٍ وَّسَحِّقْهُمْ تَسْحِيْقًا

என்ற துஆவே அவர்களுக்காக நமது நாவிலிருந்து வெளிப்படுகின்றது. உள்ளத்திலிருந்து(ம்) வெளிப்படுகின்றது.

அதேபோன்று பாகிஸ்தானின் நிலைமைக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அங்கும் அஹ்மதிகளின் நிலைமைகளை சரியாக்குவானாக. ஃபுர்கினோபாஸ்ஃவிலும் அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன. அங்குள்ள மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அதேபோன்று அல்ஜீரியாவிலும் அஹ்மதிகள் மீது சில வழக்குகள் உள்ளன. அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் எல்லா இடத்திலும் அஹ்மதிகளை பாதுகாப்பாக வைப்பானாக.

பங்களாதேசத்தில் நான் கூறியது போன்று, கவலைப்படாதீர்கள்; ஜல்ஸா நடத்துங்கள்; நாங்கள் முழுமையான பாதுகாப்பு கொடுப்போம் என்று அரசாங்கத்தின் தரப்பில் நமக்கு கூறப்பட்டது. ஆனால் அழைக்கப்பட்டபோதும், தீவிரவாத முல்லாக்கள் தங்களது கும்பல்களை அழைத்து வந்தபோதும் காவல்துறை அங்கு வேடிக்கை பார்த்துக் கொண்டு அமர்ந்து கொண்டது. மேலும் எந்த (தடுப்பு) நடவடிக்கையும் எடுக்கவில்லை. எவ்வாறு இருப்பினும், நாம் அல்லாஹ்வின் முன் குனிய வேண்டும். அல்லாஹ்விடம் துஆ கேட்க வேண்டும். அல்லாஹ் நமது அந்த சகோதரர்களின் கடினங்களை விரைவாக அகற்றுவானாக! (ஆமீன்)

தமிழாக்கம் :
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்


**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

# ஜுமுஆ பேருரை

**முஸ்லிஹ் மவ்வூத் தினத்தையொட்டி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் அறிவுசார் சாதனைகளின் அழகிய குறிப்புகள் மற்றும் ஹுஸூர் (ரலி) அவர்களின் திருக்குர்ஆன் மொழியாக்கம், தஃப்ஸீருல் குர்ஆன் மற்றும் சில சொற்பொழிவுகளைக் குறித்த அந்நியர்களின் கருத்துகள்**

**வல்லமை, கருணை, இறை நெருக்கம் ஆகிய அடையாளங்கள் உமக்கு அருளப்படுகின்றன. அருள், பேரருள் ஆகிய அடையாளங்கள் உமக்கு வழங்கப்படுகின்றன. வெற்றி வாகையின் திறவுகோல் உமக்குக் கிடைக்கிறது.**

**வெற்றி பெற்றவரே! உம் மீது சாந்தி உண்டாவதாக**

**உமக்கு ஒரு நற்செய்தி! கம்பீரமான, தூய ஒரு மகன் உமக்கு வழங்கப்படுவார். ஒரு தூய மகன் உமக்குக் கிடைப்பார். அந்த மகன் உமது வித்திலிருந்தே உமது சந்ததியாக, வழித் தோன்றலாக இருப்பார்**

**இந்த மகன் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அக மற்றும் புற ஞானங்களால் நிரம்பியிருத்தல், புத்திக்கூர்மை உள்ளவராகவும் நுண்ணிய அறிவுடையவராகவும் இருத்தல் மற்றும் பிற சிறப்புப் பண்புகளை உடையவராக இருத்தல் ஆகிய விஷயங்களை அவரது மக்களும் அந்நியர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்**

**முற்றிலும் ஒரு புதிய கோணத்தில் திருக்குர்ஆனைப் படிப்பதற்கான சிந்தனையை தாங்கள் உருவாக்கியுள்ளீர்கள் என்பதில் ஐயமில்லை. இந்த விளக்கவுரை தனது வகையைப் பொருத்தவரை முற்றிலும் முதல் விளக்கவுரையாகும். இதில் அறிவையும் நூல்களின் சான்றையும் மிக அழகிய முறையில் ஒன்றுபடுத்தியுள்ளீர்கள். தங்களது அறிவியல் புலமையும், விசாலமான பார்வையும், தங்களது அசாதாரண சிந்தனையும் நுண்ணறிவும் தாங்கள் சான்றளிக்கும் அழகும் அதன் ஒவ்வொரு சொல்லிருந்தும் மிகத் தெளிவாகத் தெரிகிறது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 பிப்ரவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **தப்லீக்** மாதம் **17ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி :**

தங்களின் பரிவுள்ள இயற்றத்திற்கு நான் மிகவும் நன்றி செலுத்திக் கொள்கிறேன். இத்துடன் ஒரு சிறந்த நூல் உள்ளது. அதை வாசித்ததனால் எனது இயல்பில் அது மிகவும் மேலான மற்றும் உயர் தாக்கங்கங்களை ஏற்படுத்தியது. அல்லாஹ் தங்களுக்கு இந்த ஸ்பெயின் நாட்டிலும் அதற்கு வெளியிலும் பெரும் வெற்றியை வழங்குவான் என்று நான் தங்களுக்கு உறுதியளிக்கின்றேன்.

தற்போதைய சூழ்நிலையைக் குறித்த இந்த நூல் மிகவும் சுவாரஸ்யமானது. பின்னர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மரணத்தின்போது ஸ்ரீநகரின் பத்திரிகை நவம்பர் 11,1965-ல் இவ்வாறு எழுதியது:

ஆல் இந்தியா காஷ்மீர் கமிட்டியின் முதல் தலைவர் மரணமடைந்துவிட்டார்கள். கூறுகிறார்கள்: அன்னார் ஒரு நல்ல அறிஞராகவும், சிந்தனையாளராகவும் இருந்தார்கள். சொற்பொழிவு ஆற்றுவதில் அன்னாருக்கு யாரும் ஈடாக இருந்திருக்க மாட்டார்கள். எதுவரை என்றால், இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு மற்றும் இஸ்லாத்தின் புதிய அமைப்பு போன்ற மிகவும் ஆழமான தலைப்புகளில் ஒவ்வொரு உடனிருத்தலிலும் நடைபெற்ற சொற்பொழிவுகள் நூல் வடிவில் வெளியாகி பொதுமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அன்னார் அறிஞராகவும் திறமை பெற்றவராகவும் இருந்ததை இந்த விஷயத்தின் மூலமாக நன்றாகக் கணிக்கலாம். அதாவது, இன்டர்நேஷனல் கோர்ட் ஆஃப் ஜஸ்டிஸ் உடைய நீதிபதி ஜஸ்டிஸ் சர் ஜஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களும் அன்னாருடைய சீடர்களில் ஒருவராக இருந்தார்கள்.

அன்னாரது சொற்பொழிவுகளே அன்னாரின் இயல்பின் சிறப்புப் பண்புகளைப் பற்றி மனதை ஈர்க்கக் கூடிய ஒரு தொகுப்பை முன் வைக்கின்றது. அது ஒரு நபரிடம் இருப்பது மிகவும் அரிதாகும். அன்னார் அக மற்றும் புற ஞானங்களின் ஊற்றாகவும் இருந்தார்கள்.

இப்பொழுது அந்நியர்களும் அன்னார் அக மற்றும் புற ஞானங்களின் ஊற்றாக திகழ்ந்தார்கள் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றனர். அன்னார் சிந்தனை மற்றும் செயல் களங்களில் தனிச் சிறப்பு மிக்க வீரர் ஆவார்கள். அன்னாரின் வாழ்வின் பெரும் பகுதி ஆழ்ந்து சிந்திப்பதில் கழிந்து வந்தது. ஆனால், செயல்களத்தில் அன்னார் உறுதிவாய்ந்த ஒருவராகவும் வீரமான தலைவராகவும் இருந்தார்கள்.

பிறகு கூறுகின்றார்கள்: காஷ்மீரின் ஒவ்வொரு நபரும் மனதால், ஜனாப் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களைப் புகழ்கின்றார். ஏன் என்றால், காஷ்மீர் சுதந்திர திட்டத்தில் அன்னாருக்குப் பெரும் பங்கு உள்ளது.

1931 இல் காஷ்மீர் இயக்கம் ஆரம்பமானது. அவர்களே ஆல் இந்தியா காஷ்மீர் கமிட்டியின் முதல் தலைவராக இருந்தார்கள். அன்னாரது முயற்சிகளின் விளைவினாலேயே இந்த இயக்கம் வளர்ச்சியடைந்தது. மேலும் நான்கு திசையிலும் பரவியது.

பிறகு, ஜமாஅத்தின் வரலாற்றில் மிகவும் புகழ் பெற்ற வேம்ளே கான்ஃபரன்ஸ் இருக்கிறது. அதில் அன்னாரது கட்டுரை வாசிக்கப்பட்டது. அதில் அந்நியர்களின் தாக்கங்கள் என்னவாக இருந்தன! கட்டுரை நிறைவடைந்த பிறகு, தலைவர் சுருக்கமான சொற்களில் கருத்து தெரிவித்தவாறு கூறினார்:

நான் அதிகம் கூற வேண்டிய தேவையில்லை. கட்டுரையே அதன் சிறப்பு மற்றும் உன்னதத்தைக் கணிக்க வைத்துவிட்டது.

இவர் ஓர் ஆங்கிலேயேர் ஆவார். இவர் கூறுகின்றார்:

நான் என் தரப்பில் இருந்தும் வருகை தந்திருப்பவர்கள் தரப்பிலிருந்தும் கட்டுரையின் வரிசைச் சிறப்பு, சிறந்த சிந்தனைகள் மற்றும் உயர் தரமான முறையில் பொருத்திக் கூறியது ஆகியவற்றிற்காக கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வருகை தந்திருக்கக் கூடியவர்கள் நான் கூறுவதோடு ஒத்துப் போகிறார்கள் என்பதை அவர்களின் முகங்கள் வெளிப்படுத்துகின்றன. நான் உறுதியாக நம்புகிறேன்! நான் அவர்கள் சார்பாக நன்றி செலுத்துவதில் உண்மையில் நிலைபெற்று இருக்கின்றேன் என்றும் அவர்கள் கூற விரும்புவதை நான் கூறும் உரிமையை நிறைவேற்றுகின்றேன் என்றும் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

பிறகு, ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களைப் பார்த்து அவர் பணிவுடன் கூறினார்: உங்கள் சொற்பொழிவு வெற்றி பெற்றதற்கு உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று வாசிக்கப்பட்ட தங்களது கட்டுரை சிறந்த கட்டுரையாக இருந்தது.

ஒரு நபர் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களிடம் வந்தார். அறிக்கை எழுதக் கூடியவர்கள் எழுதுகின்றார்கள்:

அவர் மிகவும் பணிவுடன் கூறினார்: நான் இந்தியாவில் 30 ஆண்டுகாலம் பணியாற்றியுள்ளேன். முஸ்லிம்களின் நிலைமை மற்றும் ஆதாரங்களைப் பார்திருக்கின்றேன். நான் ஒரு மிஷனரி என்ற ரீதியில் இந்தியாவில் இருந்திருக்கின்றேன். ஆனால், எந்த அளவு சிறப்பான முறையிலும், தூய்மையான வடிவிலும் உன்னதமான முறையிலும் தாங்கள் இன்றைய கட்டுரையை முன் வைத்தீர்களோ

இதைப் போன்று நான் இதற்கு முன்னால் ஒருபோதும் எந்த இடத்திலும் கேட்டதில்லை. எனக்கு இந்தக் கட்டுரையை கேட்டு இதன் சிந்தனைகள் என்ன! வரிசைக் கிரமம் என்ன! ஆதாரங்கள் என்ன! மிகவும் தாக்கம் ஏற்பட்டது.

எவ்வாறு இருப்பினும் இதுபோன்ற எண்ணற்ற தாக்கங்கள் இருக்கின்றன. பல்வேறு தலைப்புகளில் அன்னாரது கட்டுரைகள் மற்றும் சொற்பொழிவுகளின் எண்ணிக்கையும் எண்ணற்றது. இதை ஆரம்பத்தில் நான் கூறிவிட்டேன். சில மாதிரிகளை நான் முன் வைத்துள்ளேன்.

தமாஸ்கஸின் ஃபத்ஹூல் அரப் பத்திரிகையின் ஒரு சான்றை முன் வைக்கின்றேன். 1924 இல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஐரோப்பா சென்றபோது வழியில் அரபு நாடுகளிலும் தங்கினார்கள். அந்த இடைப்பட்ட நேரத்தில் அரபு நாடுகளின் ஊடகங்களும் அன்னாரைப் பற்றிய தமது கருத்துகளை வெளியிட்டன. ஆக, தமாஸ்கஸின் ஃபத்ஹூல் அரப் எனும் பத்திரிகை ஆகஸ்ட் 10, 1924 தேதி இதழில் இவ்வாறு எழுதுகிறது: இந்த கலீஃபா அவர்கள் தமது வயதின் 40 வது ஆண்டில் இருக்கின்றார்கள். முகத்தில் கருமையான அடர்த்தியான தாடி வைத்துள்ளார்கள். முகம் கோதுமை நிறத்தில் உள்ளது. கம்பீரமும் கண்ணியமும் முகத்தில் மேலோங்கி நிற்கிறது. தூய்மை புத்திசாலித்தனம், அசாதாரணமான அறிவு மற்றும் புத்திக்கூர்மையை இரண்டு கண்களும் எடுத்துக் கூறுகின்றன.

அவர்கள் பனிக்கட்டியை போன்ற தமது மென்மையான தலைப்பாகையை அணிந்திருக்கையில் அவர்களின் முகத்தின் தோற்றத்தில் இந்த அறிவுத்திறனை நீங்கள் பார்த்தீர்களாயின் நீங்கள் எப்படிப்பட்ட மனிதருக்கு முன்னால் இருக்கின்றீர்கள் என்றால் நீங்கள் அவரைப் புரிவதற்கு முன் உங்களை அவர் புரியக் கூடியவராக இருக்கின்றார் என்று உங்களுக்கு உறுதியாக ஏற்பட்டுவிடும். அவர் தன் பார்வையில் உங்களைப் பார்த்து விடுகிறார். அவரது உதட்டில் புன்சிரிப்பு பூத்துக் கொண்டே இருக்கிறது. பிறகு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களைப் பற்றிக் கூறுகின்றார்கள்:

அவரது உதட்டில் புன்சிரிப்பு பூத்துக் கொண்டே இருக்கிறது. அது சிலவேளை வெளிப்படுகிறது. சிலவேளை மறைந்துவிடுகிறது. எப்பொழுதும் புன்சிரித்தவாறு இருக்கின்றார். பிறகு வாசகர்களுக்காக எழுதுகின்றார்:

அந்த நிலையை நீங்கள் பார்த்தால் பிறகு அந்தப் புன்சிரிப்புக்குக் கீழ் இருக்கும் அர்த்தங்கள் மற்றும் அதில் உள்ள கம்பீரத்தால் நீங்கள் வியப்படைந்து விடுவீர்கள். இதுபோன்ற எண்ணற்ற தாக்கங்கள் இருக்கின்றன. எவர்களுக்கு சிறிதளவோ அதிகமாகவோ ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களுடன் இருப்பதற்கான வாய்ப்பு கிடைத்ததோ அந்த அந்நிய மக்களின் தாக்கங்கள் இவை ஆகும். கருத்துகளின் குவியல்களோ மிக ஏராளமாக இருந்தன. நான் கூறியது போன்று நான் அதை ஒன்று திரட்ட வைத்தேன். ஆனால், நேரத்தின் காரணமாக சிலவற்றை நான் எடுத்துரைத்தேன். அதையும் சுருக்கமாக எடுத்துரைத்தேன். அதுவும் முழு விஷயங்களையும் எழுதவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) எந்த விஷயங்களை முன்னறிவிப்பில் கூறினார்களோ அல்லது இவ்வாறு கூற வேண்டும்: அல்லாஹ் அன்னாருக்குக் கூறியிருந்தானோ அவை ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் முஸ்லிஹ் மவ்வூத் அவர்களிடம் நிறைவேறின.

அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியிருந்த அறிவு மற்றும் இறைஞானத்துடன் பெரும் பெரும் அறிஞர்களாலும் எதிர்த்து போட்டியிட முடியாமல் இருந்தது. அன்னாரால் வழங்கப்பட்டுள்ள இலக்கியம் ஜமாஅத்தின் ஒரு கருவூலமாகும். அன்னாருடைய சொற்பொழிவுகள் குத்பாக்கள், கட்டுரைகள் என பெரும்பாலும் வெளியாகிவிட்டன. சில வெளியாகிக் கொண்டிருக்கின்றன. நாம் அவற்றை வாசிக்க வேண்டும். இப்பொழுது மொழியாக்கப் பணியும் சிறப்பான வேகத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதுவும் விரைவாக ஆங்கிலத்திலும் கிடைத்துவிடும். இன்ஷாஅல்லாஹ். ஆக, அதிகமான பிண நடந்துவிட்டது. நடக்கவும் செய்கிறது. அதாவது, சில நூல்கள் சின்னச் சின்ன நூல்கள் வெளியாக இருக்கின்றன. அல்லாஹ் நமக்கு இந்த அறிவு மற்றும் இறைஞானத்திலிருந்து பலன் பெறுவதற்கான நற்பேறை வழங்குவானாக!

தமிழாக்கம் :
மவ்லவி அதாவுல் முக்னீ

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

## 12-ம் பக்கத் தொடர்ச்சி

தற்போது சில இடங்களில் வல்லுநர்கள் இவ்வாறும் கூறிவருகின்றனர். அதாவது போர்கள் மூளும் சூழலில் ஏற்படவிருக்கும் அழிவு எவ்வளவு அபாயகரமானதாக இருக்கும் என்றால், ஓர் அனுமானத்தின் அடிப்படையில் போர் நிகழும்போதும் அதன் பிறகும் இரண்டு ஆண்டுகள் அணு ஆயுதங்களின் பயன்பாடுகளின் காரணமாக உலகின் 66 சதவிகித மக்கள்தொகை உலகிலிருந்து அழிந்துவிடும். மேலும் எப்படிப்பட்ட அழிவு ஏற்படும் என்றால் அதனை எவராலும் கற்பனைக் கூட செய்து பார்க்க முடியாது. ஒரு சாதாரண மனிதனால் அதனை சிந்தித்து கூட பார்க்க முடியாது. ஆக, மிகவும் அபாயகரமான நிலைமைகள் உருவாகியுள்ளன.

இதுபோன்ற சூழலில் நம்பிக்கைக்கான ஏதாவது ஒளிக் கதிர் உள்ளதென்றால், அமைதிக்கான உத்திரவாதம் இருக்கின்றதென்றால் அது ஒன்றே ஒன்றுதான். அதாவது எவரை அல்லாஹ் பாதுகாப்பு மற்றும் அமைதிக்கான போதனையுடன் உலகில் அனுப்பியுள்ளானோ எவர் அமைதியின் இளவரசராக உள்ளாரோ எவர் அல்லாஹ்விற்கு எல்லா மனிதர்களையும் விட மிகவும் அன்பிற்குரியவராக உள்ளாரோ எவர் மீது அல்லாஹ்வின் இறுதியான மற்றும் முழுமையான ஷரீஅத் இறங்கியுள்ளதோ எவர் தனது இறைவனுடனான தொடர்பின் காரணமாகவும், தம் மீது இறங்கியுள்ள போதனையை உலகில் பரப்புவதற்கும் உலகை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கும் கவலையையும் அதற்காக கடுமையான வேதனையையும் உணர்ந்ததன் காரணமாக தமது வாழ்க்கையை மாய்த்துக் கொண்டாரோ (அவர் பக்கம் வர வேண்டும்). மேலும் அவர் இந்த அளவிற்கு தமது நிலைமையை ஆக்கிக் கொண்டார். மேலும் வேதனையால் துடித்தவாறும் அழுதவாறும் அல்லாஹ்விடம் அவர் துஆ செய்தார். அதனால் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம்,

لَعَلَّكَ بَاخِعٌ نَّفۡسَكَ اَلَّا يَكُوۡنُوۡا مُؤۡمِنِيۡنَ

என்று கூறினான். பொருள்:அவர்கள் நம்பிக்கை கொள்வதில்லை என்பதற்காக நீர் உம்மையே மாய்த்துக் கொள்வீரா? (41:4)

ஆக, அந்த இருப்பு தமது உள்ளத்தில் மனிதஇனத்திற்காக இந்த அளவிற்கு வேதனை கொண்டிருந்தது. அதாவது மக்கள் தம்மை படைத்த இறைவனின் பக்கம் குனிய வேண்டும்; அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்; தமது இம்மையையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்; மறுமையையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று அந்த நபர் வேதனை கொண்டார். வேறு எந்த போதனையும் அதனுடன் போட்டியிட முடியாது வகையில் முழுமையான போதனையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கினார்கள்.

மேலும் உண்மையில் அல்லாஹ்வால் வழங்கப்பட்ட அமைதிக்கான உத்திரவாத்தை அமைதியின் உத்திரவாதமாக அன்னார் (ஸல்) வழங்கினார்கள். ஆனால் வேதனை என்னவென்றால், முஸ்லிம்களும் அந்த போதனையை மறந்துவிட்டார்கள். மேலும் வெறும் ஈமானிய முழக்கங்களை மட்டும் முழங்கி ஒருவர் மற்றவரின் இரத்தத்தின் மீது தாகம் கொண்டவர்களாக ஆகியுள்ளனர். மேலும் அதற்காக அந்நியர்களிடம் உதவியைத் தேடக் கூடியவர்களாக உள்ளனர்.

தமிழாக்கம்:
மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்,

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்.........

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 06 April 2023 Issue No. 14

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நிகழ்த்திய ஜெர்மன் ஆண்டு மாநாட்டின் நிறைவுரை

**(21 ஆகஸ்ட், 2022 - ஞாயிற்றுக்கிழமை, அய்வானே மஸ்ரூர், இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட், யூ.கே)**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ○ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّينِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ○
صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ○

அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனி தனது ஆண்டு மாநாட்டை நடத்துவதற்குரிய நற்பேறை அல்லாஹ் வழங்கியுள்ளான். மேலும் கடந்த ஆண்டைக் காட்டிலும் பரந்த ஏற்பாடுகளுடன் நீங்கள் இந்த ஜல்ஸாவை நடத்திக் கொண்டிருக்கின்றீர்கள். முன்னர் கோவிட் தொற்று உலகை இன்னல்களில் ஆழ்த்தியிருந்தது. மேலும் தற்போது அந்தத் தொற்றின் இன்னல்களும் முடிந்துவிடவில்லை. அதற்குள் தற்போது உலகில் போர்களுக்கான சூழல்கள் உலகை ஒரு மாபெரும் அபாயகரமான இடத்தில் கொண்டு வந்து நிறுத்தி விட்டது. உலகின் எந்த ஒரு பகுதியும் அந்த சாத்தியமான அழிவிலிருந்து பாதுகாப்பாக இருப்பதாக தென்படவில்லை. ஏக இறைவனின் பக்கம் குனியாத வரை அழிவிலிருந்து தப்பிக்கவும் முடியாது.

போர்களுக்கான சூழல், குழப்பத்திற்கான சூழல், மேலும் பகுதிகள் மற்றும் நாடுகளின் அழிவிற்கான சூழ்நிலைகள் எங்கு உருவாகியிருந்தனவோ அல்லது உருவாகிக் கொண்டிருந்தனவோ அவை நம்மிடம் இருந்து ஆயிரக்கணக்கான மைல் தொலைவில் உள்ளது. எனவே நாம் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்ற எண்ணத்தில் முன்னர் ஐரோப்பா அல்லது மேற்கத்திய நாடுகள் மற்றும் முன்னேற்றம் அடைந்த நாடுகள் அமர்ந்திருந்தன.

ஆனால் நிலைமைகள் மோசமாக உள்ளன. குண்டுகள் வீசப்படுகின்றன. மக்கள் மடிந்துக் கொண்டிருக்கின்றனர். பெண்கள் விதவைகளாகி வருகின்றனர். குழந்தைகள் அனாதைகளாகி வருகின்றனர். மக்கள் ஊனமுற்றவர்களாக ஆகிவருகின்றனர். ஆசியாவிலும், மத்திய கிழக்குப் பகுதியிலும், ஏழை நாடுகளிலும் அவ்வாறு பாதிக்கப்பட்டு வருகின்றனர். நமக்கு அதனால் என்ன பாதிப்பு ஏற்பட்டுவிடும்? என்ற எண்ணத்தில் முன்னர் மக்கள் இருந்தனர்.

எங்களது ஆயுதங்கள் விற்பனையாகிக் கொண்டிருக்கட்டும் என்று முன்னேற்றமடைந்த நாடுகள் அந்த நாடுகளுக்கு ஆயுதங்களை வழங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் மடிந்தால் மடியட்டும். அதனால் நமக்கு என்ன பாதிப்பு? என்று எண்ணினர். ஆனால், இந்த நிலைமைகள் அவர்கள் மீதும் வரக்கூடும் என்பதை அவர்கள் மறந்துவிட்டனர். மேலும் முன்னேற்றத்தின் பெருமையில் அவர்களின் அறிவு மழுங்கிவிட்டது. மேலும் கண்கள் குருடாகிவிட்டன.

பின்னர், தற்போது எதனைக் குறித்த அபாயம் இருந்ததோ அதுவே நிகழ்ந்துவிட்டது. மேலும் ஐரோப்பாவிலும் போர் சூழல்கள் உருவாகி விட்டன.

உக்ரைனின் காரணமாக ரஷ்யா மற்றும் நேட்டோ நாடுகள் எதிரெதிராக நிற்கின்றன. இறுதியில் யார் வெற்றி பெற இருக்கின்றார் அல்லது இரு தரப்பிலும் எவ்வளவு பாதிப்பு ஏற்படும் என்பதை இறைவனே நன்கு அறிவான். ஆனால், இதன் விளைவுகள் மிகவும் அபாயகரமானதாக இருக்கும் என்பது உறுதியான விஷயமாகும். இப்போதும் கூட அறிவுடன் செயல்படவில்லையென்றால் பின்னர் ஓர் அபாயகரமான அழிவு அதன் முடிவாக இருக்கும்.

அடுத்து நாம் பார்க்கின்றோம். அதாவது, தற்போது தைவான் விவகாரமும் எழுந்துள்ளது. தற்போது முழு உலகமும் அபாயகரமான போரின் விளிம்பில் நிற்கின்றது என்பது தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. ஆசியாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. தீவுகளில் வசிப்பவர்களே! எந்த செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவி செய்யமாட்டான். நான் நகரங்கள் வீழ்வதை பார்க்கின்றேன். மேலும், வசிப்பிடங்கள் வெறிச்சோடிக் கிடப்பதை பார்க்கின்றேன் என்று இக்காலத்தில் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அடியார் மிகவும் அழுத்தத்துடன் எச்சரிக்கை செய்திருக்கின்றார்.

(ஹக்கீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயீன், தொகுதி 22, பக்கம் -269)

இதுவே அந்த சைகை ஆகும். எச்சரிக்கை ஆகும். மேலும் Warning ஆகும். இதன் காரணமாகவே அஹ்மதிய்யா கலீஃபாக்கள் அவ்வப்போது (உலகிற்கு) கவனமூட்டிக் கொண்டிருந்தார்கள். நானும் ஒரு நீண்ட காலமாக இதன் பக்கம் கவனமூட்டி வருகின்றேன். நீங்கள் உங்களை படைத்த ஏக இறைவனின் பக்கம் குனியவில்லையென்றால் பின்னர் அழிவு உறுதி ஆகும் என்று கூறிவருகின்றேன்.

கூட்டணி உருவாகிக் கொண்டிருக்கின்றன. மேலும் அதன் இறுதி விளைவு ஒருவர் மற்றவரின் அழிவாக அமையும். எனவே விழித்துக் கொள்ளுங்கள் என்று நீண்ட காலமாக நான் கூறிவருகின்றேன்.

ஆனால் பெரும்பாலான மக்கள் இந்த விஷயங்களை கேட்கின்றனர். கேட்டு வந்தனர். தற்போதும் கேட்கின்றனர். நிலைமைகள் சற்று மோசமாக உள்ளன என்று கூறிவிடுகின்றனர். உண்மைதான். நிலைமைகள் சற்று மோசமாக உள்ளன. ஆயினும், நீங்கள் வடிக்கும் அபாயகரமான மற்றும் அவநம்பிக்கையான நிலைமைக்குரிய சித்திரம் ஒன்றும் இல்லை என்று அவர்கள் கூறிவந்தனர். என்னிடமும் அவ்வாறு மக்கள் கூறினர். நமது ஜமாஅத்தின் உறுப்பினர்களிடமும் மக்கள் அவ்வாறு கூறினர். ஆனால், தற்போது (நாம் கூறிய) அந்த விஷயங்களை மேலோட்டமாக பார்த்து வந்த அதே மக்கள், நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே சென்று வருகின்றது; இதே நிலைமை நீடித்தால் பின்னர் எந்நேரமும் அபாயகரமான போருக்கான சூழல் உருவாகிவிடக் கூடும் என்று சுயமே கூறத் தொடங்கிவிட்டனர்.

தற்போது இந்த விஷயத்தை அவர்களின் think tank மக்களும், அரசியல் வல்லுநர்களும் கூறத் தொடங்கிவிட்டனர். ஆனால், அதன் பிறகும் கூட அமைதிக்கான சூழலை நிலைநாட்டுவதற்குரிய தீர்வு அவர்களிடம் இல்லை. அமைதிக்கான அசல் ஊற்றின் மீது அவர்களுக்கு பார்வை இல்லாதபோது அது எவ்வாறு இருக்கவும் முடியும்? உலகில் மூழ்கிக் கிடக்கின்றனர். மேலும் மார்க்கத்தை மறந்து விட்டனர்.

எங்கு அமைதிக்கான தீர்வு இருக்கின்றதோ அங்கு முஸ்லிம் அல்லாத அரசாங்கங்களும் வர விரும்பவில்லை. துரதிஷ்டவசமாக முஸ்லிம் அரசாங்கங்களும் வர விரும்பவில்லை.

இதன் தொடர்ச்சி 11ம் பக்கம்

**National Watch Company**
**Sales & Service**




**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad